E Paper

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

மின்னிதழ்

2023 மார்ச் 18 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 91 இல. 66 | Saturday 18, March, 2023 | 11 பக்கங்கள்

## இலங்கைக்கு உரம் வழங்கியமை உறுதிப்பாட்டின் அடையாளம்

### இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் தெரிவிப்பு



இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள 36,000 மெற்றிக்தொன் டிரிப்பிள் சூப்பர்போஸ்பேட் என்ற TSP உரம், 10 இலட்சத்துக்கும் அதிகமான விவசாயிகளின் நெல் உற்பத்திக்கு உதவியாக

06

## அமைச்சர் பந்துலவின் எண்ணக்கருவில் உருவான "சதராவ தீபனீ" கௌரவிப்பு நிகழ்வு







போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் எண்ணக்கருவுக்கமைய ஏற்பாடு செய்யப்பட்ட "சதராவ தீபனீ" கௌரவிப்பு நிகழ்வு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் (16) நடைபெற்றது.

கலைப் படைப்புகளுக்குப் பங்களித்த கலைஞர்களைப் பாராட்டும் நிகழ்வு இங்கு நடைபெற்றதுடன், தர்மசிறி பண்டாரநாயக்க, பராக்கிரம நிரியெல்ல, சிறில் விக்கிரமகே ஆகிய சிரேஷ்ட கலைஞர்களுக்கு ஜனாதிபதி விருதுகளை வழங்கினார்.

பேராசிரியர் ஆரியரத்ன அத்துகல, குமார திரிமாதுர, சரத் கொத்தலாவல உள்ளிட்ட மூத்த கலைஞர்களும் இங்கு கௌரவிக்கப்பட்டனர்.

அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் கலைத்துறை தொடர்பாக பேராசிரியர் பிரனீத் அபயசுந்தர, ரஞ்சித் குமார, அருண குணரத்ன, தினுஷ குடாகொடகே ஆகிய சிரேஷ்ட ஊடகவியலாளர்களால், தொகுக்கப்பட்ட "சுபந்து சினிமா வத்த" நூல் வெளியீடும் இந்நிகழ்வுக்கு இணையாக

06

## மலையக பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள

# ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கு இலவச அரிசி வழங்கும் திட்டம்

### புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று கைச்சாத்து

**நாட்டின் பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு, மாணவர் இடைவிலகலை தடுப்பதும் அவர்களை ஊக்குவிப்பதுமே திட்டத்தின் நோக்கம்**



மலையக பெருந்தோட்டப் பகுதிகளிலுள்ள ஆரம்பக் கல்வி பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக அரிசி வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நேற்று கைச்சாத்திடப்பட்டது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் நேற்று (17) இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

அரச சார்பற்ற நிறுவனமான 'Good Neighbors International' இத்திட்டத்துக்கான பங்களிப்பை வழங்குகின்றது.

இதன்படி, மலையகத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆரம்பப் பிரிவு

06

## தனியார் பல்கலை மாணவருக்கு அரச வங்கிகளின் மூலம் கடன்

### பதினொரு இலட்சம் ரூபாவை வட்டியில்லாமல் வழங்க ஏற்பாடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தனியார் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மூன்று அரசாங்க வங்கிகள் ஊடாக வட்டியில்லாத கடனை பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

அந்தத் திட்டத்தின் கீழ் ஒரு மாணவருக்கு 11 இலட்சம் ரூபா வீதம் இந்தக் கடன் வழங்கப்படும் எனவும், அவர் தெரிவித்தார். அது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"அரசாங்கம் கடந்த ஐந்து வருடங்களாக அந்த மாணவர்களுக்கு கடன் வழங்கி வந்துள்ளது. பாடத் திட்டத்துக்காக 8 இலட்சம் ரூபா மற்றும் அதனைத் தவிர, அவர்களின் அன்றாடச் செலவுகளுக்காக மேலும் மூன்று இலட்சம் ரூபாவையும் வழங்கி வருகின்றது.

இந்தக் கடன் அவர்கள் கல்வியை முடித்துக்கொண்டு தொழிலுக்குச் சென்றதன் பின்னர், ஒரு வருடம் கழித்தே அவர்களிடமிருந்து மீள அறவிடப்படும். அது மட்டுமின்றி, வட்டி இல்லாமல் முதல் மட்டுமே அவர்களிடமிருந்து அறவிடப்படும்.

இந்த வருடம் சில நெருக்கடிகள் காணப்படுகின்றன.

06



## அரசியல் கட்சிகளிடம் கணக்கு அறிக்கை கோரல்

### சமர்ப்பிக்குமாறு தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

03

## சட்டவிரோதமாக நுழைவோருக்கு அவுஸ்திரேலியாவுக்குள் இடமில்லை

### இலங்கைக்கான ஆஸி. தூதுவர் போல் ஸ்டீவன்ஸ் எச்சரிக்கை



அவுஸ்திரேலியாவுக்குள் சட்டவிரோதமாக நுழையும் எண்ணம் கொண்ட இலங்கையருக்கு ஒருபோதும் நுழைய முடியாதென, இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீவன்ஸ் எச்சரித்துள்ளார்.

எனவே, ஆட்கடத்தல் செயற்பாடுகளை கட்டுப்படுத்த இலங்கை அரசாங்கமும் அவுஸ்திரேலிய அரசாங்கமும் இணைந்து செயற்பட்டு வருவதாகவும், அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் தெரிவித்தார்.

மேலும், கடந்த ஆண்டு இலங்கையில்

06

## சிறைச்சாலைகளில் நீண்டகாலமாக நோயுற்றிருப்போருக்கு பொதுமன்னிப்பு

### சட்டத்தில் திருத்தம் கொண்டுவர நீதி அமைச்சு நடவடிக்கை



சிறைச்சாலைகள் ஒழுங்கு விதிகள் சட்டம் முழுமையாக திருத்தியமைக்கப்பட்டு, சிறைப்படுத்தப்படும் கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் மிகவும் மனிதாபிமான அடிப்படையிலான ஒழுங்குவிதிகளை உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக, நீதி அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

குறிப்பாக, சிறைச்சாலைகளில் நீண்டகாலமாக நோய் வாய்ப்பட்டிருப்பவர்களை பொது மன்னிப்பில் விடுதலை செய்ய

06

## திறைசேரியிடமிருந்து போதிய பணம் கிடைக்கவில்லை

## உள்ளூராட்சி தேர்தல் நடைபெறுவது மேலும் தாமதமடைய வாய்ப்பு

### ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார




உள்ளூராட்சித் தேர்தல் தாமதமடையக்கூடுமென, ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார். தேர்தலுக்கான வாக்குச்சீட்டுகளை அச்சிடுவதற்கு தேவையான பணம் திறைசேரியிடமிருந்து இதுவரை கிடைக்காமையே அதற்குக் காரணமெனவும், அவர் தெரிவித்தார்.

திறைசேரியிடமிருந்து குறைந்தபட்சம் 300 மில்லியன் ரூபா பணம் வழங்கப்படுமாயின், அச்சிடும் பணிகளை ஆரம்பிக்க முடியுமெனவும் இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார தெரிவித்தார்.

06

## 'பூறு மூனா' எனப்படும் பாதாள உலக நபர் அவிசாவளையில் கைது



கொலைகள் மற்றும் குற்றச்செயல்கள் தொடர்பாக பொலிஸாரால் தேடப்பட்டு வந்த 'பூறு மூனா' எனப்படும் ரவிந்து சங்க சில்வா என்ற பாதாள உலக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் அவிசாவளை பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாக, பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர் வெளிநாடு

06

## சுயாதீன ஊடகவியலாளரும் எழுத்தாளருமான

## தமிழ் அரசியல் கைதி சதீஸ் பொதுமன்னிப்பில் விடுதலை



**யாழ்.விசேட நிருபர்**

ஜனாதிபதியினால் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட தமிழ் அரசியல் கைதியான செல்லையா சதீஸ்குமார் நேற்று வெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்பட்டார்.

சுயாதீன ஊடகவியலாளரும் எழுத்தாளருமான 'விவேகாந்தனூர் சதீஸ்'என அழைக்கப்படும் செல்லையா சதீஸ் கடந்த 15 வருடகாலமாக சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

06

## மட்டு. ரயிலில் கைவிட்ட குழந்தை;

## பெற்றோரிடம் ஒப்படைக்க நீதிமன்றம் நேற்று உத்தரவு



மட்டக்களப்பு ரயிலில் கைக்குழந்தையை விட்டுச் சென்ற பெற்றோரிடமே குழந்தையை ஒப்படைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

13 நாள் கைக்குழந்தையை மட்டக்களப்பு ரயிலில் விட்டுச்சென்றவர்கள் தாங்கள் சட்டப்படி திருமணம் செய்யவுள்ளதாக நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளதுடன், குழந்தையை தங்களுடன் வைத்துப் பராமரிப்பதற்கான அனுமதியையும் கோரியுள்ளனர்.

06

## மைத்திரியின் மனு மீது ஜூலை 31 இல் விசாரணை

### ஐவர் அடங்கிய நீதியரசர்கள் குழாம் விசாரிக்கும்



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள தனிப்பட்ட முறைப்பாட்டை வலுவிழக்கச் செய்யக் கோரி முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை எதிர்வரும் ஜூலை மாதம் 31ஆம் திகதி

06

## தங்கநகைகளை இலக்கு வைத்து

## வலி. கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் மீது வாள் வெட்டு

### மனைவியுடன் செல்கையில் சம்பவம், இருவரும் ஆஸ்பத்திரியில்



யாழ். வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் செல்வராசா மற்றும் அவரின் மனைவி மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதுடன், படுகாயங்களுக்குள்ளான இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில்

06

## முன்னாள் எம்.பி. பியசேன மோட்டார் சைக்கிள் விபத்தில் பலி

### ஆலையடிவேம்பு பகுதியில் நேற்று சம்பவம்



**வாச்சிக்குடா விசேட நிருபர்**

அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பி.எச்.பியசேன விபத்தி ல் சிக்கி உயிரிழந்துள்ளார். நேற்றுக் காலை 7.30 மணியளவில் அக்கரைப்பற்று பொத்துவில் பிரதான வீதியில் ஆலையடிவேம்பு பொதுமயானத்துக்கு முன்பாக இடம்பெற்ற

06

## பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்தவும்

### அரசிடம் ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை



அரசாங்கத்தினால் தற்போது நாட்டை நிர்வகிக்க முடியாவிட்டால், பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்துகின்றோமென, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் தற்போதைய நிதி அமைச்சின்

06

## பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்த முதல் பெண்

### தனுஷ்கோடியிலிருந்து மன்னார் வந்து மீண்டும் திரும்பி சாதனை



தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னாருக்கு நீந்தி வந்து மீண்டும் தனுஷ்கோடிக்கு நீந்தி பாக்கு நீரிணைக் கடற்பகுதியை கடந்த முதல் பெண் என்ற சாதனையை இந்தியப் பெண் படைத்துள்ளார்.

தமிழகத்தையும் இலங்கையையும் பிரிக்கும்

06

# சர்வதேச செய்திகள்

## பல பில்லியன் டொலர் ஆதரவு: வங்கிகளின் நெருக்கடி தளர்வு




அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் பிரச்சினையில் உள்ள கடன் வழங்குனர்களுக்கு பல பில்லியன் டொலர்கள் விடுவிக்கப்பட்டதைத் தொடர்ந்து உலகளாவிய வங்கி நெருக்கடி குறித்த அச்சம் தளர்த்தப்பட்டதோடு ஆசிய பங்குச் சந்தைகளும் மீட்சி பெற்றுள்ளன.

அமெரிக்காவில் பெரிய 11 வங்கிகள் இணைந்து சிக்கலில் மாட்டியிருக்கும் பெஸ்ட் ரிப்பப்லிக் வங்கிக்கு 30 பில்லியன் டொலர் மதிப்புடைய ஆதரவுத் திட்டத்தை அறிவித்துள்ளன. இதனைத் தொடர்ந்து நேற்று (17) சீனா, ஜப்பான், தென் கொரியா, மலேசியா, அவுஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ் மற்றும் ஹொங்கொங்கில் பங்குகள் உயர்ந்தன.

சிலிக்கன் வெல்லி வங்கி மற்றும் சிக்னெச்சர் வங்கி ஆகிய இரண்டு வங்கிகள் அண்மையில் முடங்கியதை அடுத்து அந்நாட்டின் பங்குச் சந்தையில் பதற்றம் ஏற்பட்டது.

தனியார் வங்கிச் சேவைகள், சொத்து நிர்வாகம் ஆகியவற்றில் ஈடுபடும் பெஸ்ட் ரிப்பப்லிக் வங்கி மீதான முதலீட்டாளர்களின் நம்பிக்கை அடிபட்டது. அதன் பங்கு விலைகள் 30 வீதம் சரிந்தன.

வங்கி முடங்கிவிடுவதைத் தவிர்க்க ஜேபீமோர்கன் செஸ், அமெரிக்க வங்கி உள்ளிட்ட அமெரிக்காவின் பெரிய வங்கிகள் உதவ முன்வந்தன. இதனை அடுத்து பெஸ்ட் ரிப்பப்லிக் வங்கியின் பங்கு விலைகள் 10 வீதம் அதிகரித்தன.

மறுபுறம் சுவிட்ஸர்லந்தின் இரண்டாவது மிகப் பெரிய வங்கியான கிரெடிட் சுவிசின் பங்கு விலைகள் மீட்சி அடைந்துள்ளன. சுவிட்சர்லாந்தின் மத்திய வங்கியிடமிருந்து 54 பில்லியன் டொலர் கடனாகப் பெற அந்த வங்கி தீர்மானித்ததை அடுத்தே முதலீட்டாளர்களின் நம்பிக்கை அதிகரித்துள்ளது.

## இஸ்ரேலிய படையின் சூட்டில் மேலும் 4 பலஸ்தீனர்கள் பலி

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் ஜெனின் நகரில் இஸ்ரேலிய இராணுவம் நடத்திய புதிய சுற்றிவளைப்புத் தேடுதல் ஒன்றில் நான்கு பலஸ்தீனர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்ட இரு ஆயுததாரிகள் மற்றும் கடப்பாறையால் தம்மை தாக்க முயன்ற நபர் ஒருவர் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டுள்ளது. ஆயுததாரிகளுடன் துப்பாக்கிச் சண்டையிலும் ஈடுபட்டதாக அது மேலும் தெரிவித்துள்ளது.

கொல்லப்பட்டவர்களில் 16 வயது சிறுவன் ஒருவனும் இருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் மேலும் 20 பலஸ்தீனர்கள் காயமடைந்திருப்பதோடு அதில் நால்வரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

இந்த ஆண்டு ஆரம்பித்தது தொடக்கம் மேற்குக் கரையில் இஸ்ரேலிய இராணுவத்தின் சுற்றிவளைப்புகள் தீவிரம் அடைந்திருப்பதோடு உயிரிழப்பு எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. மறுபுறம் பாலஸ்தீனர்களின் தாக்குதல்களும் அதிகரித்துள்ளது.



இந்த ஆண்டில் இஸ்ரேலிய படையினரால் போராளிகள் மற்றும் பொதுமக்கள் என 80க்கும் அதிகமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதோடு பலஸ்தீனர்களின் தாக்குதல்களில் 13 இஸ்ரேலியர்கள் பலியாகியுள்ளனர்.

இந்நிலையில் கடந்த வியாழக் கிழமை நண்பகல் நேரத்திலேயே இஸ்ரேலிய சிறப்புப் படையினர் சுற்றுவளைப்பை மேற்கொண்டுள்ளனர்.

இரு கார் வண்டியில் வந்த இராணுவத்தினர் வீடு வீடாக தேடுதலில் ஈடுபட்டதோடு நிதால் கசமின் தலையில் சூடு நடத்தினர் என்று பார்த்தவர் ஒருவர் விபரித்துள்ளார்.

இதில் இஸ்லாமிய ஜிஹாத் மற்றும் ஹமாஸ் போராட்டக் குழுக்களை சேர்ந்தவர்கள் கொல்லப்பட்டிருப்பதை பலஸ்தீன சுகாதார அமைச்சு உறுதி செய்திருப்பதோடு கொல்லப்பட்ட 16 வயது சிறுவன் எந்தத் தொடர்பும் அற்றவன் என்று குறிப்பிட்டுள்ளது.

## உக்ரைனுக்கு போலந்து போர் விமானங்களை வழங்க முடிவு



உக்ரைனுக்கு போலந்து சோவியட் காலத்து நான்கு மிக் போர் விமானங்களை வழங்கவுள்ளது. உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்புக்குப் பின்னர் அந்த நாட்டுக்கு விமானங்களை வழங்கும் முதல் நேட்டோ நாடாக போலந்து இடம் பிடித்துள்ளது.

எதிர்வரும் நாட்களில் இவை அனுப்பப்படும் என்றும் மற்றவை எதிர்காலத்தில் கையளிக்கப்படும் என்றும் போலந்து ஜனாதிபதி அன்ட்ரெசஜ் டுடா தெரிவித்துள்ளார்.

இது போலந்தின் வான் பாது காப்பை பலப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்பட்டபோதும் ரஷ்யாவுடனான போரில் ஒரு திருப்புமுனையாக அமையாது என்று கூறப்பட்டுள்ளது. மற்ற நாடுகளும் இதனை பின்பற்றும் என்று தாம் எதிர்பார்ப்பதாக உக்ரைன் பாராளுமன்ற பிரதிச் சபாநாயகர் ஒலேனா கன்ட்ரட்யுக் தெரிவித்துள்ளார்.

உக்ரைனிய விமானிகள் பயிற்சி பெற்றிருக்கும் சோவிட் காலத்து விமானங்களை உக்ரைனுக்கு வழங்க மற்ற நேட்டோ நாடுகளும் ஆலோசித்து வருகின்றன. எனினும் எப்–16 போன்ற நவீன போர் விமானங்களை தரும்படி உக்ரைன் முன்னதாக மேற்கத்திய நாடுகளை கேட்டிருந்தது.

உக்ரைனிய விமானிகளுக்கு நேட்டோ தரம் கொண்ட விமானங்களை செலுத்த பிரிட்டன் பயிற்சி அளிக்கிறது. எனினும் நீண்ட பயிற்சி காரணமாக நீண்ட கால தீர்வாகவே மேற்கத்திய ஜெட்களை வழங்க முடியுமாக இருக்கும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் இருந்து உக்ரைனுக்கு ஜெட்களை அனுப்புவதை அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் முன்னதாக நிராகரித்திருந்தார்.

## ரஷ்ய ஜெட் இடித்த அமெரிக்க விமானத்தின் வீடியோ வெளியீடு



ரஷ்யப் போர் விமானம் அமெரிக்காவின் ஆளில்லா விமானத்தை இடித்துத் தள்ளிய வீடியோ வெளியிடப்பட்டுள்ளது. அமெரிக்க இராணுவப் படையின் ஐரோப்பிய கட்டளையகம் அதனை வெளியிட்டது.

வீடியோவின் ஆரம்பத்தில் ரஷ்யாவின் எஸ்.யு–27 விமானம் அமெரிக்காவின் எம்.கியு–9 ஆளில்லா விமானத்தை நோக்கிச் செல்கிறது. ஆளில்லா விமானத்தின் மேல் எரிபொருளைக் கொட்டுவது தெரிகிறது. அப்போது வீடியோ பதிவில் இடையூறு ஏற்பட்டது.

எரிபொருள் கொட்டப்பட்டபோதும் ஆளில்லா விமானம் வழக்கம்போல் இயங்கியது. இரண்டாவது முறை ஆளில்லா விமானத்தை நெருங்கும் போர் விமானம் அப்படியே அதை இடித்துத் தள்ளுகிறது.

சுமார் ஒரு நிமிடத்திற்கு வீடியோ பதிவாவதில் மீண்டும் இடையூறு ஏற்படுகிறது. ஆளில்லா விமானத்தின் சில பாகங்கள் இம்முறை சேதமுற்றிருப்பது தெரிகிறது.

சம்பவம் சுமார் 40 நிமிடங்கள் நீடித்ததாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு கூறியது.

கருங்கடலில் விழுந்த ஆளில்லா விமானத்தை கண்டுபிடிப்பது சுலபமல்ல. ஆனால் தவறானவர்களின் கைகளுக்கு அது கிடைத்துவிடாமல் தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று அமெரிக்கா கூறியது.

## பிரெட்டி சூறாவளி: மாலாவியில் உயிரிழப்பு 326 ஆக அதிகரிப்பு



மாலாவி நாட்டில் பிரெட்டி சூறாவளியால் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 326 ஆக அதிகரித்துள்ளது. இதன்படி கடந்த பெப்ரவரி தொடக்கம் இந்த புயலால் தெற்கு ஆபிரிக்க நாடுகளில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 400ஐ தாண்டியுள்ளது.

இரண்டாவது முறையாக இந்த சூறாவளி தெற்கு ஆபிரிக்க பகுதியை தாக்கியதை அடுத்து ஏற்பட்ட, கடும் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளில் கொல்லப்பட்ட சடலங்கள் தொடர்ந்து மீட்கப்பட்டு வருகின்றன.

பிரெட்டி சூறாவளி ஆரம்பத்தில் பெப்ரவரி பிற்பகுதியில் தெற்கு ஆபிரிக்க பிராந்தியத்தை தாக்கி பின்னர் மடகஸ்கார் மற்றும் மொசம்பிக் நாடுகளையும் சூறையாடியது. பின்னர் இந்திய பெருங்கடலை நோக்கி நகர்ந்த இந்த சூறாவளி மீண்டும் வலுப்பெற்று இரண்டாவது முறையாக கடந்த வாரம் தெற்கு ஆபிரிக்க பிராந்தியத்தை மீண்டும் தாக்கியது.

இதில் மொசம்பிக் நாட்டில் குறைந்தது 73 பேர் கொல்லப்பட்டிருப்பதோடு மடகஸ்காரில் மேலும் 17 பேர் பலியாகியுள்ளனர்.

## ஆப்கானிய பெண்களுக்காக ஆதரவளிக்க ஐ.நா அழைப்பு



ஆப்கான் பெண்கள் தங்கள் உரிமைகள் மற்றும் அபிலாஷைகளுக்காகப் பல முனைகளில் போராடி வருவதால் அவர்களுக்கு உலக நாடுகள் ஆதரவு அளிக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்ரெஸ் வலியுறுத்தியுள்ளார்.

உலகெங்கிலும் உள்ள பெண்களின் நிலை குறித்து மதிப்பீடு செய்வதற்காக ஐக்கிய நாடுகள் ஆணைக்குழு ஏற்பாடு செய்திருந்த கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியைப் பொறுப்பேற்ற பின்னர் அந்நாட்டு பெண்கள் மற்றும் சிறுமிகளின் பல அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன. உலகில் பெண்கள் மற்றும் சிறுமிகளை மிகவும் அடக்கும் நாடாக ஆப்கான் உள்ளது.

குறிப்பாக தலிபான்கள் ஆட்சியைப் பொறுப்பேற்ற பின்னர் 530க்கும் மேற்பட்ட நாட்கள் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்காக பல்கலைக்கழகங்களும் இரண்டாம் நிலைப் பாடசாலைகளும் தடுக்கப்பட்டுள்ளன. அவர்களது உரிமைகளுக்காக நாம் தொடர்ந்தும் குரல் கொடுக்கிறோம் என்றார்.

## லிபியாவில் காணாமல்போன யுரேனியம் தாது கண்டுபிடிப்பு



சர்வதேச அணுசக்தி நிறுவனத்தால் காணாமல்போனதாக அறிவிக்கப்பட்ட இரண்டரைத் தொன்கள் யுரேனியம் தாதுவை கண்டுபிடித்ததாக கிழக்கு லிபியாவின் ஆயுதப் படைகள் தெரிவித்துள்ளன.

சாட் நாட்டுடனான எல்லைப் பகுதியில் இந்தத் தாதுக்களைக் கொண்ட பத்து பீப்பாய்களை கண்டுபிடித்ததாக அந்தப் படைகளின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இந்த ஊடகச் செய்தியை உறுதி செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாக சர்வதேச அணுசக்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த வாரம் ஆரம்பத்தில் இடம் குறிப்பிடப்படாத தளத்திற்கு சென்று கண்காணிப்பில் ஈடுபட்ட நிறுவனம் யுரேனியம் காணாமல்போயிருப்பது குறித்து எச்சரிக்கை விடுத்திருந்தது. இந்தப் பகுதி அரச கட்டுப்பாட்டில் இல்லாத இடமாகும்.

இயற்கையில் பெறப்படும் கனிமமான யுரேனியத்தை சுத்திகரிப்பது அல்லது செறிவூட்டுவதன் மூலம் அணு சக்தி செயற்பாடுகளுக்கு பயன்படுத்த முடியும்.

காணாமல்போன இந்த யுரேனியம் அதன் தற்போதைய நிலையில் அணு ஆயுதம் தயாரிக்க பயன்படுத்த முடியாது என்றபோதும் அணு ஆயுதத் திட்டம் ஒன்றுக்காக மூலப்பொருளாக பயன்படுத்த முடியும் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். 2003 டிசம்பரில், இராணுவ ஆட்சியாளர் முஅம்மர் கடாபியின் கீழ் லிபியா அணு, உயிரியல் மற்றும் இரசாயன ஆயுதங்கள் தயாரிக்கும் திட்டங்களை வெளிப்படையாகக் கைவிட்டது.

எனினும் 2011 ஆம் ஆண்டு கடாபி பதவி கவிழ்க்கப்பட்டது தொடக்கம் அந்த நாடு இராணுவ மற்றும் அரசியல் தரப்புகள் இடையே பிளவுபட்டு காணப்படுகிறது.

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2023 மார்ச் 18 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN



**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 05.03 |
| லுஹர் | 12.21 |
| அஸர் | 03.35 |
| மஃரிப் | 06.22 |
| இஷா | 07.31 |

**இன்றைய சுபதினம்**

சுபகிருது வருடம் பங்குனி 04

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி

## தவக்கால சிந்தனை



### கடவுளுக்கு ஏற்புடைய இறைவேண்டல்

**(லூக்கா 18: 9 – 14)**

தவக்காலத்தின் மூன்றாவது வார இறுதி நாளில் பயணிக்கின்றோம். இன்றைய நற்செய்தியானது தவக் காலத்தின் தவ ஒழுக்கங்களுள் ஒன்றாகிய இறைவேண்டலைக் குறித்து (செபம்) பேசுகிறது. பரிசேயர் வரி தண்டுவோர் உவமையினூடாக கடவுளுக்கு ஏற்புடைய இறைவேண்டல் எதுவென்பதை இயேசு கற்பிக்கின்றார்.

கடவுளுக்கு ஏற்புடைய இறைவேண்டலானது பரிசேயர் செய்தது போன்று தம்மைக் குறித்து தம்பட்டம் அடிப்பதல்ல. அடுத்தவர்களுடன் தம்மை ஒப்பீடு செய்து அடுத்தவர்களைக் குறைவாகவும் தம்மை மேன்மையானவர்களாவும் காட்டுவதுமல்ல.

மாறாக, இறைவனுக்கு ஏற்புடைய இறைவேண்டல் யாதெனில் வரி தண்டுவோர் வேண்டியது போன்று இறைவன் முன்னிலையில் நிற்பதற்கு தம்முடைய தகுதியின்மையினை ஏற்றுக்கொண்டவராக தம்மைத் தாழ்த்திய நிலையேயாகும்.

தம்மை நேர்மையாளர்களாக எண்ணி அடுத்தவரைத் தாழ்த்துவோரைக் குறித்தே இந்த உவமை கூறப்பட்டுள்ளது.

தவக்காலப் பயணமானது மன மாற்றத்தின் பயணமாகும். அம் மன மாற்றத்தை வரிதண்டுவோர் தமது இறைவேண்டலினூடாக பெற்றுக் கொண்டார். இறையடியவர்களின் தவக்காலப் பயணமும் தம்மைத் தாழ்த்துவதுடன் அடுத்தவரை இகழ்வதை, மனநோகச் செய்வதை, நோகடிப்பதைத் தவிர்த்து உண்மையான மனமாற்றத்தின் இறைவேண்டலாக அமையட்டும்.

அத்தகைய இறைவேண்டல் இறை பாதத்தில் கேட்கப்படுவதால் அவரது அருளினையும் ஆசீரினையும் திண்ணமாய்ப் பெற முடியும். தவக்காலம் அதற்கு வழி வகுப்பது உறுதி.

அருட்தந்தை நவாஜி...

பாடசாலை மாணவர் மதிய உணவுத் திட்டம்

# மாகாண கல்வித் திணைக்களங்களுக்கு ரூ. 814 மில்லியன் அதிக தொகை விடுவிப்பு

2023ஆம் ஆண்டு ஜனவரி மாதத்துக்கான பாடசாலை மதிய உணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக மாகாணக் கல்வித் திணைக்களங்களுக்கு 814 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகை முற்பணமாக விடுவிக்கப்பட்டுள்ளதாக, கல்வி அமைச்சு தெரிவித்தது.




உலக உணவுத் திட்டம் மற்றும் அமெரிக்க உதவியின் கீழ் அரிசி, பருப்பு, டின் மீன், சமையல் எண்ணெய் போன்றவை வழங்கப்பட்டுள்ளதுடன், வாரத்தில் ஐந்து நாட்களும் மாணவர்களுக்கு வழங்கப்படும் மதிய உணவு வகைகளில சோறும் சேர்க்கப்பட்டுள்ளது.

இதுவரை மதிய உணவு வழங்கப்பட்ட 11 இலட்சம் மாணவர்களின் எண்ணிக்கையை அடுத்த பாடசாலை தவணையிலிருந்து இரு மடங்காக அதிகரிக்கப்படுவதுடன், 51% பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தகவல் அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது. பாடசலையில் மாணவர்களின் வருகையை அதிகரிக்கச் செய்தல், நல்ல ஆரோக்கிய உணவுப் பழக்கத்தை உருவாக்குதல், மாணவர்களுக்கு சமச்சீரான உணவுப் பழக்கத்தை ஊக்குவித்தல், அதன் மூலம் பாடசாலை மாணவர்களின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை தகுந்த அளவில் பேணுதல், கல்வி நடவடிக்கைகளில் மிகச் சிறந்த முறையில் ஈடுபடுத்தல், வகுப்பறையில் சரியாக கவனம் செலுத்தும் விதம், மாணவர்களுக்கு இடம் வழங்குவது இந்த சத்துணவுத் திட்டத்தின் முதன்மை நோக்கமாகுமென்றும், கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

## கொழும்புத் தமிழ்ச் சங்கம் நடத்தும் 'நிறுவுனர் தின விழா'

கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர், சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் தலைமையில் 'நிறுவுனர் தின நிகழ்வு' எதிர்வரும் புதன்கிழமை (22) மாலை 5.00 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக பேராசிரியர் சி.மௌனகுரு கலந்து கொள்ளவுள்ளார். இதன்போது, தொடக்கவுரையை கொழும்புத் தமிழ்ச் சங்க நிர்வாகக்குழு உறுப்பினர் சட்டத்தரணி சுகந்தி இராஜகுலேந்திராவும் 'தமிழியல் ஆய்வு நேற்று இன்று நாளை நிறுவனங்களை அடிப்படையாகக் கொண்டு' எனும் தலைப்பில் சிறப்புரையை பேராசிரியர் வ.மகேஸ்வரனும் நிகழ்த்தவுள்ளனர்.

பேராசிரியர் சி.மௌனகுரு மற்றும் 'கலாசூரி' திவ்யா சுஜேன் ஆகியோரது ஒழுங்கமைப்பில் சங்கமிப்பு (கூத்தும் பரதமும்) நிகழ்வு நடைபெறவுள்ளது. நன்றியுரையை கொழும்புத் தமிழ்ச் சங்கப் பொதுச் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி நிகழ்த்தவுள்ளார்.

# அரசியல் கட்சிகளிடம் கணக்கு அறிக்கை கோரல்

### சமர்ப்பிக்குமாறு தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

2021ஆம் ஆண்டுக்கான கணக்கு அறிக்கையை சமர்ப்பிக்காத அரசியல் கட்சிகள், அதனை விரைவில் சமர்ப்பிக்குமாறு தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதற்கமைய, நேற்று முதல் எதிர்வரும் 14 நாட்களுக்குள் கணக்கறிக்கையை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், அந்த ஆணைக்குழு கேட்டுக்கொண்டுள்ளது. எனினும், தேர்தல் ஆணைக்குழுவின் அறிவிப்பை மீறும் கட்சிகள், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியாக கருதப்பட மாட்டாதெனவும், அந்த ஆணைக்குழு மேலும் தெரிவித்தது.



பாகிஸ்தானின் தேசிய தினத்தை முன்னிட்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க மற்றும் நிலையத்தின் ஆலோசகர் ஹாசிம் உமர் ஆகியோரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன அலுவலகத்தில் வைத்து பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் உமர் பாரூக் பர்கி சந்தித்த போது...

# கொழும்பில் காற்றின் தரம் மீண்டும் மோசமடைவு

### முகக்கவசம் அணியுமாறு எச்சரிக்கை விடுப்பு

நாட்டின் பல பகுதிகளில் வளிமண்டலத்தின் நிலை ஆரோக்கியமற்றதாகக் காணப்படுவதாக, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்தது.

முற்பகல் 11.30 மணியளவில், நாட்டில் மிகவும் மோசமாக காற்று வீசியதாக, கொழும்பு நகரில் பதிவாகியுள்ளது. கொழும்பில் காற்றின் தர மதிப்பு 135 அலகுகள் எனவும், அந்த நிறுவனம் தெரிவித்தது.

கம்பஹாவில் காற்றின் தர மதிப்பு 130 அலகுகளாகவும் யாழ்ப்பாணத்



தில் 128 அலகுகளாகவும் கொழும்பு, பத்தரமுல்லை மேற்குப் பகுதியில் 121 அலகுகளாகவும் பதிவாகியுள்ளன.

06

# Listeria நோய் காரணமாக நாட்டில் பெண்ணொருவர் பலி!




சிவனொளிபாதமலைக்கு யாத்திரை செல்லும் வழியில், சிறிய கடையொன்றை நடத்தி வந்த பெண்ணொருவர், லிஸ்டீரியா (Listeria) நோயால் மரணமாகியுள்ளார். இதனை சுகாதாரத் துறை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த நோயால் பாதிக்கப்பட்ட பெண், கடந்த மாதம் 23ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இதன்போது, அவருக்கு லிஸ்டீரியா நோய் தொற்றியுள்ளமை, ஆரம்பக்கட்ட பரிசோதனைகளில் உறுதியானதாக சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர், விசேட வைத்தியர் ரஞ்சித் பட்டுவந்துடாவ தெரிவித்தார்.

அதேசமயம், சிவனொளிபாதமலைக்குச் செல்லும் ஒரு வழியில், வைரஸ் தொற்றுக் காரணமாக இருவர் உயிரிழந்ததாக, சமூக வலைத்தளங்களில் வெளியான தகவலை சுகாதாரத்துறை உறுதிப்படுத்தவில்லையென, சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிகிரி கொப்பேகடுவ முன்னதாக தெரிவித்திருந்தார்.

சிவனொளிபாதமலை வனப்பகுதியிலுள்ள சிறிய கடை ஒன்றில் பணியாற்றும் பெண் ஒருவரும், யாத்திரையில் ஈடுபட்டிருந்த சிறுமி ஒருவரும், வைரஸ் தாக்கம் காரணமாக உயிரிழந்ததாக தகவலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதேவேளை, சம்பவம் தொடர்பாக சமூக வைத்திய நிபுணர் சங்கத்தினூடக இணைப்பாளர் வைத்தியர் நவீன் டி

06

# முதலீட்டுத் துறைகளின் பிரச்சினைகளை தீர்த்து சர்வதேச முதலீடுகளை உள்ளீர்க்க திட்டம்

### இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தலைமையில் கூட்டம்

முதலீட்டு பிரச்சினைகளை தீர்ப்பதற்கான இரண்டாவது கூட்டம் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் திலும் அமுனுகம தலைமையில் சபையின் முதலீட்டு வசதிக்கான மத்திய நிலையத்தில் (IFC) அண்மையில் நடைபெற்றது.



பல துறைகளில் காணப்படும் பிரச்சினைகளை தீர்ப்பதற்குத் தேவையான ஆலோசனைகள் மற்றும் உத்தரவுகள் அமைச்சரால் அதிகாரிகளுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டன.

மீன் பதப்படுத்தல் மற்றும் உற்பத்திப் பயிர்களுக்குரிய பிரச்சினைகள் பற்றி இங்கு கலந்துரையாடப்பட்டன. இந்தப் பிரச்சினைகளுக்காக அச்சந்தர்ப்பத்திலேயே அமைச்சு அதிகாரிகளுடன் கலந்துரையாடி குறிப்பிட்ட முதலீட்டாளர்களுக்கான பதில்களை வழங்க முடிந்தது.

இச்சந்தர்ப்பத்தில் முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம கூறியதாவது,

BOI நிறுவனம் ஏனைய நிறுவனங்களுடன் இணைந்து நடவடிக்கையில் ஈடுபடுவது மற்றும் விரைவாக தீர்வுகளை பெற்றுக்கொடுப்பது என்பன, நாட்டுக்கு வெளிநாட்டு முதலீடுகளை நேரடியாகக் கொண்டு வருவதற்கான சூழலை உருவாக்குவதற்கு உதவியாக இருக்கும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை முதலீட்டுச் சபையின்

06

முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின்

# கனடாவுக்கான இலங்கை பிரதிநிதியாக இரத்தினகுமார்



முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் கனடாவுக்கான இலங்கை பிரதிநிதியாக கனடாவைச் சேர்ந்த இளம் வர்த்தகர் ஆனந்தம் இரத்தினகுமார் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் செயலகத்தில் கடந்த புதன்கிழமை (15) மேற்படி நியமனம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நியமனத்தை முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம வழங்கினார்.

மேற்படி நியமனத்தைப் பெற்றுக்கொண்ட கனேடிய வர்த்தகர் ஆனந்தம் இரத்தினகுமார், தனது நியமனத்தினூடாக தான் நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டங்கள் தொடர்பாக ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

# யாத்திரை சென்றவர்களின் மரணம் உணவு நஞ்சானதால் ஏற்பட்டிருக்கலாம்

### பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கடந்த சில தினங்களாக நாட்டின் பல பகுதிகளிலும் தலயாத்திரை மேற்கொண்டிருந்த பக்தர்கள் நால்வர் உயிரிழந்துள்ளமைக்கு உணவு நஞ்சாகியமையே காரணம் என்று சந்தேகப்படுவதாக, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்தச் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன மேலும் தெரிவித்த போது, உணவு நஞ்சடைந்து மற்றும் பற்றீரியா பரவல் காரணமாக அதுபோன்ற மேலும் பக்தர்கள் 10 பேர் நோயாளிகளாக இனங்காணப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இதேவேளை, சிவனொளிபாதமலை யாத்திரை உள்ளிட்ட யாத்திரைகளில் ஈடுபடும் பக்தர்கள், சுகாதாரப் பாதுகாப்புத் தொடர்பாகக் கவனம் செலுத்தி,

06



வட இந்திய முதலீட்டார்களும் தென்னிந்திய நகை வியாபாரிகள் சங்கத்தின் தலைவர் சுலாணி தலைமையில் 92 பேர் கொண்ட குழுவினரும் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு வருகை தந்தனர். இவர்களை அகில இலங்கை நகை வியாபார சங்கத்தின் தலைவர் ஆ.விஜயகுமார், செயலாளர் தி.சரவணன், பொருளாளர் ஏ.பாலசுப்பிரமணியம், உறுப்பினர் பொன். பத்மநாதன் மற்றும் இலங்கை இந்திய வர்த்தகத் தொடர்பாளர் மணவை அசோகன் ஆகியோர் பொன்னாடை அணிவித்து வரவேற்ற போது....

# விழித்தெழு சர்வதேச பெண்கள் அமைப்பின் விருது வழங்கும் விழா

கனடாவில் உள்ள விழித்தெழு சர்வதேச பெண்கள் அமைப்பு, இலங்கையில் பல்துறைகளில் சாதனை படைத்த 50க்கும் மேற்பட்ட பெண்களை விருது வழங்கிக் கௌரவிக்கவுள்ள நிலையில், இந்த விருது வழங்கும் விழா கொழும்பு கிங்ஸ்பெரி ஹோட்டலில் எதிர்வரும் 21ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது. விழித்தெழு சர்வதேச பெண்கள் அமைப்பின் தலைவி சசி நரேனின் ஏற்பாட்டில் கோலாகலமாக நடைபெறவுள்ள இவ்விழாவில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், கல்விமான்கள், கலைஞர்கள், தொழில் அதிபர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# வருடாந்த பொதுக்கூட்டம்

பேராதனை பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் 32ஆவது வருடாந்த பொதுக்கூட்டம், எதிர்வரும் 31ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணி முதல் 6.00 மணி வரை, இலக்கம் 120/ 15, விஜேராம மாவத்தை, கொழும்பு 07 இல் உள்ள என்ஜினியர்ஸ் இன்ஸ்ரிரியூட் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் ப ங்குபற்றுவதற்கான நுழைவுச் சீட்டுகளை பெற்றுக்கொள்வது தொடர்பாக, சங்கத்தின் பொதுச் செயலாளர் பிரியாத் கப்ராலுடன் 0777560708 என்ற அலைபேசி இலக்கம் மூலமாக தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. சங்கத்தின் இணையத்தள முகவரி: www.aaupcc.org

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 203.45 | 218.35 |
| கனடியன் டொலர் | 223.17 | 239.59 |
| யூரோ | 328.39 | 349.71 |
| ஜப்பான் யென் | 2.2763 | 2.4249 |
| சிங்கப்பூர் டொலர் | 228.62 | 244.11 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 370.07 | 393.49 |
| சுவிஸ் பிராங்க் | 332.65 | 356.98 |
| அமெரிக்க டொலர் | 311.62 | 328.90 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்றின் டினார் | 845.12 | கட்டார் ரியால் | 87.33 |
| குவைத் டினார் | 1,036.67 | சவூதி ரியால் | 84.87 |
| ஓமான் ரியால் | 827.60 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 86.74 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் பங்குனி மாதம் 04ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ஷஃபான் பிறை 25

### குறள் தரும் சிந்தனை



கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு

தொன்றுதொட்டு உரிமையுடன்
பழகிய நட்புறவைக் கைவிடாமல்
இருப்பவரை உலகம் போற்றும்.

## மாணவரின் கல்வி பாதிக்கப்பட ஆசிரியர்கள் இடமளிக்கலாகாது!

நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் வீழ்ந்திருக்கின்ற இவ்வேளையில், நிலைமையை மேலும் மோசமாக்கும் வகையிலேயே எதிரணியினரின் செயற்பாடுகள் இடம்பெறுவதைக் காண முடிகின்றது. நாட்டில் ஆங்காங்கே தறபோது இடம்பெற்று வருகின்ற ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற வேலைநிறுத்தம் ஆகியவற்றை நோக்குகின்ற போது, எதிரணியினரின் செயற்பாடுகள் யாவும் நாட்டுக்கு விரோதமாக அமைந்திருப்பதையே காண முடிகின்றது.

எமது நாட்டின் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலையிலேயே உண்டென்பது சர்வதேசத்துக்கே தெரிந்த விடயமாகி விட்டது. கடந்தகால அரசாங்கங்கள் வெளிநாடுகளிடமிருந்து பெற்றுக் கொண்ட கடன்களை மீளளிக்க வேண்டிய தேவை ஒருபுறமிருக்க, நாட்டை மீளக்கட்டியெழுப்புவதாயின் சர்வதேச நிறுவனங்களிடமிருந்து மேலும் கடன்களை வாங்க வேண்டிய நிலைமையிலேயே எமது நாடு தற்போது உள்ளதென்பதை எவரும் மறந்து விடலாகாது.

இலங்கைக்கு கடன் வழங்குவதற்கு சர்வதேச நிறுவனங்களே தயங்கிக் கொண்டிருக்கின்ற ஒரு நிலைமை உள்ள போது, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடனைப் பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் பெரிதும் சிரமப்பட வேண்டியுள்ளது. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் கிடைக்குமென்ற உத்தரவாதமும் கிடைத்து விட்டது.

நிலைமை இவ்வாறிருக்கையில், சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவிக்கு முட்டுக்கட்டை போடும் விதத்தில் காரியங்கள் இடம்பெறுவதையே தற்போது காணக்கூடியதாக உள்ளது. நாட்டின் பொருளாதாரத்தை மேலும் மோசமாக்கும் வித்தில் வேலைநிறுத்தம் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் அடிக்கடி இடம்பெற்று வருமானால் இலங்கையின் பொருளாதாரம் மீண்டெழ முடியாத விதத்தில் வீழ்ச்சிக்கு உள்ளாகி விடுமென்பதை மக்கள் அனைவரும் உணர்ந்து கொள்ளத்தான் வேண்டும்.

நாட்டில் கடந்த புதன்கிழமையன்று மேற்கொள்ளப்பட்ட வேலைநிறுத்தம் காரணமாக தேசிய வருமானத்தில் பாரிய பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நாட்டின் வருமானத்தில் மாத்திரமன்றி, மாணவர்களின் கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள பாதிப்பும் சாதாரணமானதல்ல. இலவசக் கல்வியை மாத்திரமே நம்பியிருக்கின்ற மாணவர்களைப் பொறுத்தவரையில், கல்விப் பாதிப்பு என்பது சாதாரணமானதல்ல.

ஆசிரியர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சில தொழிற்சங்கங்கள் தற்போது முழுநேர அரசியல் அமைப்புகளாக மாறி விட்டதைக் காண முடிகின்றது. அத்தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் ஊடக சந்திப்புகளை நடத்தி ஆக்ரோஷமாகக் குரல் எழுப்புகின்றனர். முன்னரெல்லாம் ஆசிரியர்களின் சம்பள உயர்வு பற்றி மாத்திரமே குரலெழுப்பிய தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தற்போது ஆசிரியர்களைப் பற்றியும் கூட அதிகம் பேசுவதைக் காண முடியவில்லை.

ஆட்சியாளர்களை வீட்டுக்கு அனுப்ப வேண்டுமென்றே ஆசிரிய தொழிற்சங்கங்கள் சிலவற்றின் தலைவர்கள் வெளிப்படையாகக் குரலெழுப்புகின்றனர். அவர்கள் உண்மையிலேயே ஆசிரியர்களின் நலனுக்கான தொழிற்சங்கத் தலைவர்களா அல்லது அரசியல்வாதிகளா என்பதைக் கண்டுபிடிக்க முடியாதிருக்கின்றது.

ஆசிரிய தொழிற்சங்கங்கள் ஆசிரியர்களின் நலன்களை மாத்திரமே பேசுவது முறையல்ல. பாடசாலை ஆசிரியர்களை மாத்திரமே நம்பியிருக்கின்ற வறிய மாணவர்கள் நாட்டில் ஏராளமாக உள்ளனரென்பதை ஆசிரிய தொழிற்சங்கங்கள் மறந்து விடலாகாது. அம்மாணவர்கள் இலவசக் கல்வியை மாத்திரமே நம்பியிருக்கின்றனர். தனியார் ரியூஷன் வகுப்புகளுக்குச் செல்வதற்கு அம்மாணவர்களின் பெற்றோரிடம் பணம் கிடையாது.

அரசாங்கப் பாடசாலைகளை மாத்திரம் நம்பியே அப்பெற்றோர் தங்களது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புகின்றனர். இலவசக் கல்வியின் தந்தையெனப் போற்றப்படுகின்ற கன்னங்கரா அவர்களின் குறிக்கோளும் அதுவாகவே இருந்தது. வறுமை காரணமாக நாட்டில் எந்தவொரு மாணவருக்கும் கல்வி வாய்ப்பு கிடைக்காமல் விடலாகாது என்பதுதான் கன்னங்கரா அவர்களின் எண்ணமாக இருந்தது.

அவ்வாறான இலவசக் கல்வி வாய்ப்பினாலேயே இன்றைய ஆசிரியர்கள் உருவாகினார்கள் என்பதையும் மறந்து விடலாகாது. இலவசக் கல்வியினால் உருவாகிய ஆசிரியர்கள், இன்று அவர்களை நம்பியிருக்கின்ற வறிய மாணவர்களுக்கு கல்வி வாய்ப்பை மறுப்பது நீதியல்ல.

'எழுத்தறிவித்தவன் இறைவன்' என்று எமது ஆன்றோர் அக்காலத்தில் உரைத்திருக்கின்றனர். அதன் அர்த்தம் 'கல்வி புகட்டுகின்ற ஆசான் இறைவனுக்குச் சமமானவன் என்பதாகும். ஆகவே ஆசிரியர்களையே நம்பியிருக்கின்ற மாணவர்களுக்கு கல்வியை மறுப்பதென்பது தர்மம் அல்ல.

ஆசிரியர்கள் தங்களது பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு பணிப்பகிஷ்கரிப்பை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துவது நீதியும் தர்மமும் ஆகாது. மாணவர்கள் பாதிக்கப்படாத விதத்திலேயே ஆசிரியர்கள் தங்களது பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு முற்பட வேண்டும். பெற்றோர் மற்றும் நலன்விரும்பிகளின் அவநம்பிக்கையைச் சம்பாதிக்கும்படியாக ஆசிரியர்கள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடுவது ஏற்றுக் கொள்ள முடியாததாகும். ஆசிரிய தொழிற்சங்கங்கள் இதனை உணர்ந்து கொள்வது அவசியம்.

editor.tkn@lakehouse.lk

# தமிழின் சிறப்பை சீனா எங்கும் பரப்பும் பணியில் ஈடுபட்டுள்ள தமிழ்ப் பேராசிரியரான சீனப்பெண்!

உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் பற்றி அகில உலகமும் அறியும். அவர் பிறப்பால் ஓர் இந்து. ஒரு தமிழர். தாய்மொழி தமிழ். ஆரம்பக் கல்வியும் தமிழில் கற்றவர். தமிழில் ஆய்வுகள் மேற்கொண்ட உலகப் பேரறிஞர் அவர்.

ஆனால் இந்தப் பின்புலம் ஒன்றுமே இல்லாமல் சீனப்பெண் ஒருவர் தமிழில் காதல் கொண்டு தமிழைக் கற்று தமிழ் பேராசிரியராக, பல்கலைக்கழக தமிழ்த் துறை தலைவராக உயர்ந்திருக்கிறார் என்றால் நம்ப முடிகிறதா?

சீன மக்கள் தற்போது தமிழ்மொழியை கற்பதில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். சீன பல்கலைக்கழகங்களில் தமிழ் மொழிக்கெனதனியானதுறைகள்காணப்படுகின்றன.

இந்த நிலையில் சீனாவின் யுனான் மிஞ்சு பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழி உலகளவில் வளர்ச்சி அடைந்து வருவதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த உலக அளவில் தமிழ்மொழிக்கு சீன மக்கள் பெரும் சேவையை ஆற்றி வருகின்றனர் என்றால் அது மிகையாகாது.

தமிழ்மொழி மீது கொண்ட பற்று காரணமாக தனது சீனப் பெயரையும் இவர் தூய தமிழில் 'நிறைமதி' என்று மாற்றிக் கொண்டுள்ளார்.

இந்தப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழிக்கான தனியான துறைகள் காணப்படுவதுடன், தமிழ்மொழித் துறையின் தலைவராக நிறைமதி என்னும் சீனப் பெண் விளங்குகின்றார். இவர் ஒரு பேராசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது

இவரது தமிழ்மொழித் துறையில் தமிழ்ப் பண்டிகைகளும் கொண்டாடப்படுகின்றமை விசேட அம்சமாகும். கடந்த காலங்களில் இந்த தமிழ்த் துறையில் தைப்பொங்கல் பண்டிகை விமரிசையாக கொண்டாடப்பட்டுள்ளது.

இவரிடம் தமிழ்மொழி பயின்ற சீன மாணவர்கள் உலக அளவில் தமிழ் பணி ஆற்றுகின்றனர். 'மலைகள் தாண்டி மதுரை பயணத்தில் சீனப் பெண்ணின் பண்பாட்டு தேடல்' என்னும் தமிழ் நூலையும் நிறைமதி எழுதியுள்ளார்

சீன இலங்கை நட்புறவின் பின்னர் சீனர்கள் தமிழ்மொழியை கற்பதில் மிகுந்த ஆர்வம் உடையவர்களாக காணப்படுகின்றனர். இந்த வகையில் சீனப் பெண் ஒருவர் தமிழ் அறிஞராக, பேராசிரியராக மாறியுள்ளதுடன் தமிழ்த் துறை தலைவராக யுன்நொன் மிஞ்சு பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வருகின்றார்.

அவரது நூல் இந்தியாவில் பெரும் வரவேற்பு பெற்றுள்ளது.

தமிழ்த்துறைப் பேராசிரியர் நிறைமதியுடனான செவ்வி இதோ…

**கேள்வி: தமிழ்மொழி மீது உங்களுக்கு எப்படி ஆர்வம் ஏற்பட்டது?**





## ஜாங்ச்சீ என்ற தனது பெயரை 'நிறைமதி' என்று மாற்றிக் கொண்ட பல்கலைக்கழக பெண் அறிஞர்

பதில்: தமிழ்மொழி எனது பல்கலைக்கழகத்தின் இளங்கலை பட்டம். நான் அயல்நாட்டு மொழி படிப்பதில் ஆர்வம் கொண்டவள். பல்கலைக்கழகத்தில் என்ன படிக்கப் போகிறேன் என்று பட்டம் தேர்ந்தெடுத்த போது பல அயல்மொழிகளில் தமிழ் பார்த்தேன். இது பற்றிய தகவல் இணையத்தில் தேடிப் பார்த்தேன். ஒரு கட்டுரை தமிழ் மொழி உலகில் மிக தொன்மையான செம்மொழிகளில் ஒன்று என்று கூறியது. பிறகு அக்கட்டுரையில் தமிழ் எழுத்துக்கள் காட்டின. இந்த அற்புதமான எழுத்துக்களை பார்த்தபோது மலர்கள் போல் ஆகின்றன என்று வியந்து சொன்னேன்.

இது நிச்சயமாக ஒரு சிறப்பான மொழி என்று நினைத்து இதனை எனது பல்கலைக்கழகத்தின் பட்டமாக தெரிவு செய்தேன். தமிழ்மொழி சீன மொழியை விட மிகவும் வித்தியாசமானது முதலில் இதைப் படிப்பது எனக்கு கடினம். ஆனால் படிக்கப் படிக்க இதன் மீது ஆர்வம் அதிகரித்தது . உங்கள் பேராசிரியர்கள் கவிதை, தமிழ்ப் பாடல் தமிழ்த் திரைப்படங்கள் முதலியவற்றை எங்களுக்கு அறிமுகப்படுத்தினார்கள். அவற்றில் கண்டுபிடித்துள்ள தமிழின் அழகு என்னை ஈர்த்துள்ளது. நாளுக்கு நாள் தமிழ் என் வாழ்க்கையில் முக்கியமான பகுதியாக மாறியது.

**கேள்வி: தமிழ் மொழி தொடர்பாக உங்கள் குரு யார்?**

பதில்: தமிழ்மொழி உலகிற்கு என்னை அழைத்துக் கொண்டு சென்று எனக்கு வழிகாட்டியவர் எனது பேராசிரியர் சூன் கோச்சியாங் அவர்கள். அவர் முன்னாள் சீன வானொலியின் தமிழ்ப் பிரிவின் தலைவர். வானொலி நிலையத்திலிருந்து ஓய்வு பெற்ற பிறகு எங்கள் பேராசிரியராக பணிபுரியத் தொடங்கினர். அப்போது வயதாகி உடல்நிலை மோசமாகி விட்டாலும் அவர் உறுதியுடன் தினமும் ஒரு மணி நேரம் சுரங்கப்பாதையின் மூலம் வீட்டிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு வந்து வகுப்பு எடுத்தார். இலங்கையில் தமிழ் படித்த அவர் அடிக்கடி இலங்கையின் அழகை, இயற்கை காட்சிகளை எங்களுக்கு அறிமுகப்படுத்தினார். எங்கள் தமிழ் படிப்பில் கடும் கவனம் செலுத்தி கடுமையாகவும் உன்னிப்பாகவும் இருந்தார். அவர் எங்களுக்கு அடிக்கடி கூறியதாவது, தமிழ் செம்மொழி, நன்றாக படியுங்கள் என்பதாகும். படிப்பு முடிந்த பிறகு தமிழ் பணி செய்யுங்கள் என்றார். அவரது தமிழ்ப் பற்று என் மீது பெரிதும் செல்வாக்கு செலுத்தியது. அவர் கூறியது போலவே இரு மக்களுக்கிடையே நட்பு பாலமாக தமிழ்ப் பணி செய்ய வேண்டும் என்ற கனவிற்கு நான் முயற்சி செய்கிறேன். தற்போது பேராசிரியராக நானும் எனது பேராசிரியர் சூன் அவர்களின் பொறுப்புணர்ச்சியை வழிகாட்டியாக கொண்டு மாணவர்களின் மேல் பாசமாக இருந்து உன்னிப்பாக வேலை செய்கிறேன்.

**கேள்வி: அதிகளவான மக்கள் சீனாவில் தமிழ்மொழி பயில்கிறார்கள். இது பற்றி கூறுங்கள்.**

பதில்: சீனாவில் யுன்னோன் மிஞ்சு பல்கலைக்கழகம் உட்பட மூன்று பல்கலைக்கழகங்களில் தமிழ்த் துறை அமைந்துள்ளது. சீனாவில் தமிழ் படிப்பவர்களின் எண்ணிக்கை அதிகம் இல்லை. ஆங்கிலம், பிரான்சு, ஸ்பானிஷ் போன்ற மொழிகளை விட சீனாவில் தமிழ்க் கல்வி தொடக்க நிலையில் இருக்கிறது.

ஆகவே இதைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் பேராசிரியர்கள் மற்றும் சீனர்களுக்கென தமிழ் பாடல் நூல்கள் தேவை.

அண்மைக்காலத்தில் தமிழ் மொழியின் சிறப்பை சீனர்கள் தெரிந்து கொண்டுள்ளனர். சீனாவின் தென்கிழக்குப் பகுதியில் உள்ள ஸ்வான்சேவ் நகரத்தில் தமிழ்மொழி கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு தமிழ்நாட்டுக்கும் சீனர்களுக்கும் இடையே பண்டைக்காலம் தொட்டு உறவு தொடங்கியது என்று மக்களுக்கு தெரிந்தது. சீன அரசுத் தலைவர் சி ஜிங் பிங் தமிழ்நாட்டில் இந்தியப் பிரதமர் மோடியை சந்தித்து கலந்துரையாடினர்.

**கேள்வி: உங்கள் பல்கலைக்கழக தமிழ்த் துறை குறித்து கூறுங்கள்…**

பதில்: எங்கள் பல்கலைக்கழகத்தின் பெயர் யுன்னோன் மின்சு பல்கலைக்கழகம். இது சீனாவின் தென்மேற்கு பகுதியில் உள்ள யுன்னோன் மாகாணத்தில் இருக்கிறது. எங்கள் பல்கலைக்கழகத்தில் 2017 ஆம் ஆண்டு தமிழ்த் துறை ஆரம்பித்தது. இங்கே இளங்கலை மற்றும் சில முதுகலை வகுப்புகள் உள்ளன.

தற்போது தமிழ்த் துறையில் நான் தலைவராக பணிபுரிகிறேன். தவிர வேறொரு சீன விரிவுரையாளர் மற்றும் தமிழ்ப் பேராசிரியர் இங்கு பணி செய்து கொண்டிருக்கிறார்கள். மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை மாணவர்களை சேர்ப்போம். இப்போது பத்து மாணவர்கள் நான்கு ஆண்டுகால இளங்கலை தமிழ் படித்துக் கொண்டிருக்கிறார்கள். மாணவர்கள் தங்கள் படிப்பின் மூன்றாம் ஆண்டில் இலங்கை அல்லது இந்தியாவிலுள்ள சிறந்த பல்கலைக்கழகத்தில் ஓராண்டு தமிழ் படிக்கத் திட்டம் வகுத்துள்ளோம். தமிழ்நாட்டிற்கு பயணம் செய்ய ஆசைப்படுகிறேன். இலங்கையின் கொழும்பு, யாழ்ப்பாணம், கண்டி முதலிய நகரங்களில் பயணம் செய்யவும் திட்டம் இருக்கிறது. அப்போது வேறொரு பயணநூல் எழுத ஆசைப்படுகின்றேன்.

**கேள்வி: தமிழ்மொழி மீதான உங்கள் இலட்சியம் என்ன?**

பதில்: மென்மேலும் மாணவர்களை சேர்த்து அவர்களுக்கு நல்ல தமிழ் கற்பிக்க வேண்டும். அவர்களுக்கு தமிழின் மீதான ஆர்வம் அதிகரிக்க வேண்டும். படிப்பு முடிந்த பிறகு தமிழ்ப்பணி செய்ய ஊக்கமளிப்பேன். சிறந்த தமிழ் இலக்கியங்களை சீன மொழியில் மொழி பெயர்ப்பு செய்வது எனது கனவும் கடமையும் ஆகும். தற்போது செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் ஆதரவில் மணிமேகலையை சீனமொழியில் மொழிபெயர்த்துக் கொண்டிருக்கிறேன். அதன் பிறகு, தொல்காப்பியம் பற்றி ஆராய்ந்து மொழிபெயர்க்கத் திட்டம் இருக்கிறது.

இவை தவிர ஆய்வுக் கட்டுரைகள் சிறப்பு நிகழ்ச்சிகள் மூலம் கீழடி போன்ற சிறப்பு வாய்ந்த அம்சங்களை சீனாவில் மேலும் அறிமுகப்படுத்துவேன். மாணவர்களுடன் இணைந்து தமிழ்மொழி பண்பாட்டை சீனாவில் பரப்ப போகிறோம். மென்மேலும் சீனர்கள் தமிழை ரசித்து தமிழ் வரலாற்றை புரிந்து தமிழ்மொழி கற்க வேண்டும் என்பதற்காக முயற்சி செய்கிறேன்.



வி.ரி.சகாதேவராஜா…

# மருதமுனை செஸ்டோ ஸ்ரீலங்கா ஏற்பாட்டில் பயிற்சிக் கருத்தரங்கு

மருதமுனை செஸ்டோ ஸ்ரீலங்கா தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் சமய மற்றும் கலாசாரப் பிரிவின் ஏற்பாட்டில் மருதமுனை இறை இல்லப் பணியாளர் நலன்புரிச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் 'அழகிய தொனியில் அதான் சொல்வோம்' என்ற தலைப்பில் பயிற்சிக் கருத்தரங்கு அண்மையில் மருதமுனை மக்பூலியா ஜும்ஆ பள்ளிவாசலில் செஸ்டோ நிறுவனத்தின் சிரேஷ்ட ஆலோசகரும் மருதமுனை அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் பதில் தலைவரும் மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரியின் சிரேஷ்ட விரிவுரையாளருமான அஷ்ஷேய்க் எப்.எம்.ஏ அன்சார் மௌலானா (நளீமி) தலைமையில் நடைபெற்றது.

அஷ்ஷேய்க் அல்ஹாபிழ் நஜிமுதீன் (ஹாமி) அவர்களின் கிராஅத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில் மருதமுனை பிரதேசத்திலுள்ள சுமார் 20 பள்ளிவாசல்களில் கடமையாற்றும் 21 முஅத்தின்அதிகாரிமார் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். வளவாளர்களாக செஸ்டோ நிறுவனத்தின் பிரதித் தவிசாளரும் இறக்காமம் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளருமான அஷ்ஷேய்க் அல்ஹாபிழ் எம்.எஸ்.எம். றஸ்சான்(நளீமி), வாழைச்சேனை அந்நஹ்ஜா அரபிக் கல்லூரியின் விரிவுரையாளர் அஷ்ஷேய்க் அல்ஹாபிழ் எம்.ஐ.எம். இஸ்ஸத் (நஹ்ஜி), காத்தான்குடி ஜாமிஉல் லாபிரீன் ஜும்ஆ பள்ளிவாசலின் பிரதம பேஷ் இமாம் அல்ஹாபிழ் ரிஸ்வி ஹனிபா மற்றும் செஸ்டோ நிறுவனத்தின் பிரதிச் செயலாளர் அஷ்ஷேய்க் அல்ஹாபிழ் நிலா கமால்தீன்(நளீமி) ஆகியோர் செய்முறை மற்றும் பல்லூடகம் ஊடாக பயிற்சியளித்தனர்.



செஸ்டோ நிறுவனத்தின் செயற்குழு உறுப்பினரும் மஸ்ஜிதுல் கபீர் ஜும்மா பள்ளிவாசல் பேஷ் இமாமுமான அஷ்ஷேய்க் அல்ஹாபிழ் ஏ.ஆர். பைசல் கியாஸ் (பலாஹி)அவர்களினால் முஅத்தின்அதிகாரியார்மார் அறிமுக நிகழ்வு நடத்தப்பட்டது. செஸ்டோ நிறுவனத்தின் சமய மற்றும் கலாசாரப் பிரிவின் இணைப்பாளர் அஷ்ஷேய்க் அல்ஹாபிழ் ஏ.எச். பர்ஸான் (நஹ்ஜி) நிகழ்வுகளை தொகுத்து வழங்கியதோடு, செஸ்டோ நிறுவனத்தின் தலைவர் நாபி எம் முஸ்னி நிகழ்வுகளை நெறிப்படுத்தினார்.

இந்நிகழ்வில் மக்பூலியா ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் எஸ்.எல்.எம். ஜெமீல், ஓய்வுபெற்ற அதிபர் எம்.சி. அஹமது முஹைதீன், பாண்டிருப்பு மினன் பள்ளிவாசல் தலைவர் பொறியியலாளர் எம்.எஸ். பஸீல், மருதமுனை அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் செயலாளர் அஷ்ஷேய்க் அல்ஹாபிழ் எஸ். றியாஸ் (நளீமி), செஸ்டோ நிறுவனத்தின் செயலாளர் ஹம்சா மெஹிடீன், அதன் இளைஞர் விவகார பிரிவு இணைப்பாளர் எம்.ரி.எம். ஹாரூன், சிறுவர் விவகார பிரிவு இணைப்பாளர் அஷ்ஷேய்க் ராபி எஸ். மப்ராஸ் (நளீமி), மஸ்ஜிதுன் நூர் ஜும்மா பள்ளிவாசல் பேஷ் இமாம் அஷ்ஷேய்க் அல்ஹாபிழ் ஏ.ஆர். ஜரீர், மக்பூலியா ஜும்ஆ பள்ளிவாசல் பேஷ் இமாம் அஷ்ஷேய்க் எம்.ஏ.எம். இப்ராஜ் ஆகியோர் விஷேட அதிதிகளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

பி.எம்.எம்.ஏ.காதர்…
(மருதமுனை தினகரன் நிருபர்)

# உலக அரங்கில் இந்தியாவை உச்சநிலைக்கு உயர்த்தியுள்ள G 20 தலைமைத்துவம்




**உலகம் ஸ்திரமற்றதும் கொந்தளிப்பானதுமான சூழ்நிலைகளுக்கு முகம்கொடுத்துக் கொண்டிருக்கும் இன்றைய சூழலில் ஜி20 நாடுகள் அமைப்பினதும், ஷங்காய் ஒத்துழைப்பு அமைப்பினதும் தலைமைப் பதவியை இந்தியா ஏற்பட்டிருப்பதன் ஊடாக நல்ல பலன்கள் கிடைக்கப்பெறும் என்று சர்வதேச அவதானிகள் தெரிவிக்கின்றனர்.**

இன்றைய சந்தர்ப்பத்தில் ஜி 20 அமைப்பின் தலைமையின் குறிக்கோள் மிகவும் முக்கியமானது. அதனை ஒவ்வொரு நாடும் புரிந்து கொண்டு செயற்படுவது மிகவும் அவசியம் என்கிறார்கள் அவர்கள்.

உலகப் பொருளாதாரம் பாரிய மாற்றங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கும் நேரம் இது. இச்சந்தர்ப்பத்தில் புவியில் முரண்பாடுகள், வர்த்தகப் போர், பொருளாதாரத் தடை என்பன இடம்பெற்ற வண்ணமுள்ளன. இந்நிலையில் இந்தியாவின் தலைமைத்துவமானது நல்ல பலன்களைத் தருமென்று அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

இந்தியாவின் புத்தாக்க முயற்சிகளை உரிய முறையில் பயன்படுத்தும் போது நல்ல சாதகமான சூழ்நிலைகள் உருவாகும். இந்நிலையில் இந்தியா முன்வைத்துள்ள புத்தாக்க செயற்பாட்டுக் குழுவை உருவாக்கும் யோசனை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகின்றது. இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இதனை G20 உறுப்பு நாடுகள் முழுமையாக ஆதரிக்கின்றன. ஏனெனில் உலக நாடுகளில் இளம் பராயத்தினருக்கு வாய்ப்புகளை உருவாக்குவது இன்றியமையாத விடயமாகும்.

உலகம் முழுவதும் போர் சூழ்ந்துள்ளது. ரஷ்யா_ உக்ரைன் போரில் இருந்து மீளாமல் உலகம் திண்டாடுகின்றது. எதிர்காலத்தில் உணவுப் பிரச்சினையை சரிசெய்வது மிக அவசியமானதாகும்.

ரஷ்யா_ உக்ரைன் போரில் ஐரோப்பாக் கண்டமே அதிர்கின்றது. இந்த நிலையில் ஐ.நா.வின் உதவியற்ற நிலை அதன் பலவீனத்தை பிரதிபலிக்கிறது.

இதனிடையே தாய்வான் விவகாரத்தில் அமெரிக்கா மற்றும் சீனா இடையே பதற்றம் ஏற்பட்டுள்ளது. யுத்தம் காரணமாக, உலகில் உணவு, எரிபொருள் மற்றும் உர விநியோகத்தில் பிரச்சினைகள் அதிகரித்துள்ளன. இவ்வாறான நிலையில் உலகில் பொருளாதார மந்தநிலை, பருவநிலை மாற்றப் பிரச்சினைகள், பயங்கரவாதம் போன்றவை உலகத்திற்கே தலைவலியாக மாறியுள்ளன.

இத்தகைய நேரத்திலேயே ஜி 20 போன்ற ஒரு முக்கியமான அமைப்பின் தலைவராக இந்தியா பொறுப்பேற்றுள்ளது. இது நிச்சயம் உலக உணவுப் பற்றாக்குறையில் மிக முக்கியமான முயற்சி என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஜி20 உச்சி மாநாட்டுக்கான தலைமைத்துவத்தை இந்தியா ஏற்றிருப்பது நம்பிக்கை தரும் அறிகுறியாகவே நோக்கப்படுகின்றது.

'ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்' என்பதை 2023 ஆம்ஆண்டுக்கான ஜி 20 உச்சிமாநாட்டின் கருப்பொருளாக பிரதமர் நரேந்திர மோடி முன்வைத்திருந்தார். இந்தக் கருப்பொருளின் அடிப்படையில் இந்த உச்சிமாநாட்டில் பொருளாதார வளர்ச்சி, முதலீடு, காலநிலை மாற்றத்துக்கான தீர்வுகள் மற்றும் டிஜிட்டல்மயமாக்குதல் போன்றவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு உறுதுணையாக இருக்கும் நோக்கிலேயே 'வர்த்தகம் 20' அலுவல் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## சர்வதேசம் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கும் விடயங்கள் ஏராளம்




இந்தக் குழுவில், இந்திய தொழில்கூட்டமைப்பு முக்கிய பங்காற்றுகிறது. இந்த வர்த்தக அலுவல் குழுவானது, உலகளாவிய பொருளாதார மேம்பாட்டுக்காகச் செயல்படும். ஆபிரிக்க நாட்டுச் சந்தையில் வர்த்தகம் செய்வதற்கான வாய்ப்பைப் பெறுதல் போன்ற வர்த்தக உறவை ஏற்படுத்தும் பணிகளில் இக்குழு ஈடுபடும்.

இந்நடவடிக்கையானது இந்தியாவின் தலைமைத்துவத்துக்குக் கிடைத்த ஆரம்ப வெற்றியென்றே இராஜதந்திரிகள் குறிப்பிடுகின்றனர்.

மேலும் நிதி ஆதாரம் மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சி போன்ற துறைகளில் தனிக்கவனம் செலுத்தப்படும். நவீன தொழில்நுட்ப வசதியைப் பயன்படுத்தி புத்தாக்க நடவடிக்கைகளுக்கும், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு செயல்பாடுகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும். இந்த முயற்சிகளால் எரிசக்தி, காலநிலை மாற்றம் தொடர்பான நடவடிக்கைகளும் மேம்பாடு அடையும்.

**உலகம் பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்திருந்த வேளையில், இந்தியா மற்றைய நாடுகளுக்குச் செய்த உதவிகள் அதிகம். அந்த உதவிகள் உலக நாடுகளைத் திரும்பிப் பார்க்க வைத்தன. இதனால்தான் உலக அரங்கில் இந்தியாவின் குரல் ஓங்கி ஒலிக்கிறது**

இந்தியாவின் தொழில் முனையும் திறன், புத்தாக்கச் சிந்தனை, சமூகச் பொறுப்பு ஆகியவற்றின் மூலம் உலகஅளவில் இந்தியாவின் ஆற்றலை வெளிப் படுத்தும் தளமாக 'வர்த்தகம் 20' இருக்கும்.

உலக வர்த்தகம், டிஜிட்டல்மயமாக்குதல் தொடர்பான கொள்கைகளை விவாதிக்கும் தளமாக செயல்பட்டு, அதன் மூலம் அக்கொள்கைகளுக்கு செயல் வடிவம் கொடுக்க 'வர்த்தகம் 20' உதவும்.

உலக நாடுகள் மத்தியில் இந்தியாவின் முக்கியத்துவம் நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. இந்த நிலையை அடைய இந்தியா பல முக்கிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.




சமமான மற்றும் நிலையான வளர்ச்சி, பெண்களுக்கு அதிகாரம் அளித்தல், டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு, தொழில்நுட்பம் சார்ந்த மேம்பாடு, காலநிலை நிதி உதவி, உலகளாவிய உணவுப் பாதுகாப்பு மற்றும் எரிசக்தி பாதுகாப்பு ஆகிய அனைத்தும் இந்தியாவுக்கு ஜி 20 தலைமைத்துவத்தில் இலக்குகளாக நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. இவை இந்தியா முன்பாகவிருக்கும் சவால்கள் என்கிறார்கள் நிபுணர்கள்.

மேலும் G 20 உறுப்பு நாடுகளிடையே நிலவும் பிரச்சினைகளை சுமுகமாக தீர்த்து வைத்து, கூட்டமைப்பு நாடுகளை ஒற்றுமையாக வைத்து வழிநடத்துவதும் இந்தியாவின் பொறுப்புகளில் ஒன்றாகப் பார்க்கப்படுகிறது. இதையெல்லாம் இந்தியா திறம்பட கையாளுமென்றும், அதற்கான ஆற்றலும் ஆளுமையும் பிரதமர் நரேந்திர மோடிக்கு உள்ளதாகவும் சர்வதேச இராஜதந்திரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

பொருளாதாரத் திறன், எதிர்கால திட்டமிடல், பிற நாடுகளுக்குப் பொருளாதார உதவி, பாதுகாப்பு, செல்வாக்கு ஆகியற்றின் அடிப்படையில் உலகில் சக்திவாய்ந்த நாடுகள் பட்டியலில் இந்தியா 4 ஆவது இடத்தில் இருக்கிறது. கொரோனா பொது முடக்கம் உள்ளிட்ட பிரச்சினைகளைக் கடந்து பொருளாதார முன்னேற்றம் அடைந்திருக்கிறது இந்தியா. கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு 11ஆவது இடத்திலிருந்த இந்தியா, தற்போது உலக பொருளாதாரத்தில் 5 ஆவது இடத்துக்கு முன்னேறியிருக்கிறது. உலகில் வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக இந்தியா விளங்குகிறது.

உலக நாடுகள் மத்தியில் இந்தியாவின் மதிப்பு உயர்ந்துள்ளது என்பது தொடர்பாக அரசியல் விமர்சகர் ரமேஷ் சேதுராமன் கருத்துத் தெரிவிக்கையில் "உச்சிமாநாட்டில் நாடுகள் தலைமை தாங்குவது என்பது இயல்பான ஒன்று. அதில் குறிப்பாக இந்தியாவுக்கு வழங்கப்பட்டிருக்கும் இந்த தலைமைப் பொறுப்பு என்பது இந்தியாவுக்குச் சவாலானதே. காரணம் கொரோனாவால் அனைத்து நாடுகளும் பொருளாதார வீழ்ச்சியைச் சந்தித்திருக்கின்றன. அதனால், உலக வங்கியில் அதிக கடன் வாங்கும் சூழல் அனைத்து நாடுகளுக்கும் உருவானது. அதன் பட்டியலும் சமீபத்தில் வெளியானது. இவை அனைத்தையும் சரி செய்வது இந்தியாவின் பொறுப்பு. எனினும், இந்தியா நடத்தவிருக்கும் கூட்டங்கள் வாயிலாக இதற்கான தீர்வு எட்டப்படும். அதேபோல் கடந்த காலங்களில் இந்தியா கொரோனா காலத்திலும் தன் பொருளாதாரத்தின் நிலையைக் கடந்து நாடுகளுக்கு மருந்துகளை அளித்தது. இதனால், உலக அளவில் இந்தியா முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது" என்று பாராட்டினார்.

அதேபோல் இந்தியாவின் மக்கள்தொகை என்பது உலக நாடுகளுடன் ஒப்பிடும் போது அதிக நுகர்வோர்கள் கொண்டது. அதனால், எது சார்ந்த தொழிலாக இருப்பினும் அனைவரின் முதல் தெரிவாக இந்தியாவே இருக்கிறது. மற்றொரு மக்கள்தொகை அதிகம் கொண்ட சீன நாட்டில் தொழில் தொடங்குவதில் இருக்கும் கட்டுப்பாடுகளால் உலக நாடுகளுக்கு மத்தியில் இந்தியாவின் இருப்பு அவசியமாகிறது என்பதில் ஐயமில்லை.

கொரோனா தடுப்பூசியைத் தயாரிப்பதில் உலகில் பிரதான நாடாக விளங்கியது இந்தியா. அந்நாட்டின் தேவையைக் கடந்து, 98 இற்கும் அதிகமான நாடுகளுக்குத் தடுப்பூசி வழங்கப்பட்டது. குறிப்பாக, பொருளாதாரத்தில் பின்தங்கிய மற்றும் வளரும் நாடுகளுக்குத் தடுப்பூசிகளை அனுப்புவதில் இந்தியா பிரதான கவனம் செலுத்தியது. இந்நாடுகளில் பங்களாதேஷ், மியன்மார், நேபாளம், பூட்டான், மாலைதீவு, பிரேசில், இலங்கை, மொராக்கோ, தென்னாபிரிக்கா, ஆப்கானிஸ்தான், மெக்ஸிகோ, காங்கோ, நைஜீரியா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தது குறிப்பிடத்தக்கது.

பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்த போதும் இந்தியா மற்ற நாடுகளுக்குச் செய்த உதவிகள் அதிகமாகும். அந்த உதவிகள் உலக நாடுகளைத் திரும்பிப் பார்க்க வைத்தன. இதனால்தான் உலக அரங்கில் இந்தியாவின் குரல் ஓங்கி ஒலிக்கிறது.

இவ்வாறான நிலையில் G 20 தலைமைத்துவத்தை ஏற்றிருக்கும் இந்தியாவிடமிருந்து சர்வதேச நாடுகள் அதிக எதிர்பார்ப்புகளைக் கொண்டுள்ளன என்றே கூற வேண்டும்.

**எஸ். சாரங்கன்...**

# காரைதீவில் இரு அமைப்புகளால் சத்துமா பொதிகள் விநியோகம்

**கல்முனை ஆதார வைத்தியசாலை ஒருங்கிணைப்பில் காரைதீவு பிரதேசத்திலுள்ள நலிவுற்ற கர்ப்பிணிப் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் சத்துமாப் பொதிகள் அண்மையில் விநியோகிக்கப்பட்டன.**

மட்டக்களப்பு நலிவுற்றோர் அபிவிருத்தி சங்கம் (BUDSUK) மற்றும் மட்டக்களப்பு மருத்துவமனைகளின் நண்பர்கள் (FOBHUK) ஆகியவற்றின் கூட்டு முயற்சியினால் சத்துமா விநியோகம் இடம்பெற்றது.

காரைதீவு பிரதேச வைத்தியசாலையில் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி நடராஜா அருந்திரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர்.முரளீஸ்வரன், பிரதி வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி சா.இராஜேந்திரன், சமூக செயற்பாட்டாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.





அவர்கள் 150 பயனாளிகளுக்கான சத்துமா பொதிகளையும் வழங்கி வைத்தனர்.

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் கிராமங்களில் உள்ள ஊட்டச் சத்து குறைபாடுள்ள கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு சத்துமாவை விநியோகிக்கும் திட்டத்தை ஆரம்பித்து வைத்து அதன் விநியோகம் வெற்றிகரமாக இடம்பெற்று வரும் நிலையில், கல்முனை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் ஏற்பாட்டில் சத்துமா வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி ந. ரமேஸ் தலைமையில் இடம்பெற்ற நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர். முரளீஸ்வரன்,

மட்டக்களப்பு பின்தங்கிய அபிவிருத்தி சங்கம் (பிரித்தானியா) உறுப்பினர் ரீ.சுந்தரராஜா, மட்டக்களப்பு மருத்துவமனைகளின் நண்பர்கள் அமைப்பின் இலங்கைக்கான தலைவர் வைத்திய கலாநிதி திருமதி காந்தா நிரஞ்சன், குடும்பநல வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி என்.நிரஞ்சன், கல்முனை வைத்தியசாலை அபிவிருத்தி குழுவின் உறுப்பினர் வே.தங்கவேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்ததுடன், பயனாளிகளுக்கான சத்துமா பொதிகளையும் வழங்கி வைத்தனர்.

ஒவ்வொரு குடும்பத்திற்கு 1000 கிராம் சத்துமா பொதி வழங்கி வைக்கப்பட்டதுடன், இரண்டு நிறுவனங்களும் இந்தத் திட்டத்தை மிகவும் வெற்றிகரமாகத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றன.

கல்முனை பிரதேசத்தில் இரண்டு கட்டங்களாக 3000 பொதிகளை விநியோகித்து இரண்டாம் கட்ட விநியோகத்தை நிறைவு செய்துள்ளனர்.

**காரைதீவு குறூப் நிருபர்...**

# கைத்தொழில் நகரமான கோவையில் மீண்டும் அச்சுறுத்தும் கொவிட் தொற்று!



**தமிழ்நாட்டில் கடந்த பல மாதங்களாகக் கட்டுப்பாட்டுக்குள் இருந்த கொரோனா பாதிப்பு, இப்போது மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இதற்கிடையே கோவையில் வைரஸ் பாதிப்பு அதிகரிக்கத் தொடங்கியுள்ளமை கோவை மக்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது. கடந்த 2020 இல் இந்தியாவில் நுழைந்த கொரோனா வைரஸ் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தியிருந்தது. கொரோனா பாதிப்பு காரணமாக இந்தியா இரண்டு ஆண்டுகளை முழுமையாக இழந்தது. குறிப்பாக ஊரடங்கு உள்ளிட்ட பல காரணங்களால் ஊரே முடங்கியது. அதன் பிறகு தடுப்பூசி உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இப்போதுதான் இயல்புநிலைக்குத் திரும்பி வருகிறது.**

தமிழ்நாட்டிலும் கடந்த 2020 இல் கொரோனா பரவல் முதல் அலை ஏற்பட்டது. அந்தச் சமயத்தில் இந்தியா முழுக்க முழு ஊரடங்கும் அமுல்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிறகு வைரஸ் பாதிப்பு மெல்லக் குறைந்த நிலையில், மீண்டும் வைரஸ் பாதிப்பு ஏற்பட்டு அடுத்த அலை ஏற்பட்டது. இப்படி மொத்தம் மூன்று கொரோனா அலைகள் ஏற்பட்டன.

இதனால் தமிழ்நாட்டில் வைரஸ் பாதிப்பு மோசமாகவே இருந்தது. மனித இழப்புகள் ஒரு பக்கம் என்றால், பொருளாதார பாதிப்புகளும் மற்றொரு பக்கம் மிக மோசமாகவே இருந்தன.

தமிழ்நாட்டில் தலைநகர் சென்னையில்தான் வைரஸ் பாதிப்பு உச்சத்தில் இருந்தது. சென்னைக்கு அடுத்து தொழில் நகரான கோவையிலும் வைரஸ் பாதிப்பு மோசமாக இருந்தது. குறிப்பாக, கொரோனாவின் பிந்திய காலங்களில் பல நாட்களுக்குச் சென்னையில் வைரஸ் பாதிப்பு குறைந்த போதிலும், கோவையில் கொரோனா பாதிப்பு அதிகமாகவே இருந்தது.

இதனால் பல நாட்களுக்குத் தொழில் நகரான கோவையில் கொரோனா பாதிப்பு உச்சத்தில் இருந்தது. அதன் பின்னர் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட நிலையில், அதன் பின்னரே வைரஸ் பாதிப்பு மெல்லக் குறைந்தது. கோவை மாவட்ட நிர்வாகமும் சுகாதாரத்துறையும் கோவையில் வைரஸ் பாதிப்பைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தன. அதன் பின்னரே கோவையில் கொரோனா தொற்று கட்டுப்பாட்டுக்குள் வந்தது. அதன் பின்னர் வைரஸ் பாதிப்பு தொடர்ந்து கட்டுக்குள் இருந்த நிலையில், இப்போது தொழில் நகரான கோவையில் வைரஸ் பாதிப்பு மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது சலசலப்பை உருவாக்கியுள்ளது.

இதனால் கோவை மக்களிடையே அச்சம் ஏற்பட்டுள்ளது. கொரோனா அங்கு மீண்டும் மெல்ல அதிகரிக்கத் தொடங்கியுள்ள நிலையில், மாவட்ட நிர்வாகம் மீண்டும் சுகாதாரத்துறையுடன் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மேலும், மக்கள் கூடும் இடங்களில் பரிசோதனைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி கொரோனா பாதிப்பு அதிகம் உள்ள பகுதிகள், கொரோனா நோயாளிகளுடன் தொடர்பில் இருந்தோருக்கு கொரோனா சோதனை நடத்தப்பட்டது.





மொத்தம் 462 பேருக்கு கொரோனா சோதனை செய்யப்பட்ட நிலையில், அதன் முடிவுகள் வெளியாகின. அதில் தமிழ்நாட்டில் வேறு எங்கும் இல்லாத அளவுக்குக் கோவையில் 13 பேருக்கு கொரோனா உறுதியானது. இது பார்க்கக் குறைவு போல இருந்தாலும் கூட, கடந்த காலங்களில் கொரோனா அலைகள் ஆரம்பிக்கும் போது இப்படித்தான் மெல்ல வைரஸ் பாதிப்பு அதிகரித்தது குறிப்பிடத்தக்கது.

கோவைக்கு அடுத்து சென்னையில் 8 பேர் உட்படத் தமிழகம் முழுக்க 44 பேருக்கு வைரஸ் பாதிப்பு உறுதியாகியுள்ளது. தமிழ்நாட்டில் இப்போது சுமார் 269 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். தொழில் நகரான கோவையில் கொரோனாவால் ஏற்கனவே பல தொழில்கள் நஷ்டமடைந்துள்ளன. இதற்கிடையே கோவையில் இப்போது வைரஸ் பாதிப்பு அதிகரிக்கும் நிலையில், இது கோவை மக்களிடையே கவலையை ஏற்படுத்தியுள்ளது. கொரோனா இப்போது மெல்ல அதிகரிக்கத் தொடங்கியுள்ள நிலையில், பொதுமக்கள் முகக்கவசம் அணிவது. கைகளை அடிக்கடி சவர்க்காரம் இட்டு கழுவுவது உள்ளிட்ட சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## கொழும்பில் காற்றின்... 03ஆம் பக்கத் தொடர்

எவ்வாறாயினும், காற்றின் தரக் குறியீட்டுக்கமைய, 101150 அலகுகள் மனித ஆரோக்கியத்துக்கு தீங்கு விளைவிப்பதாகக் கருதப்படுவதாக, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

சுவாசப் பிரச்சினைகள் போன்றவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக முகக் கவசம் அணிந்து கொள்ளுமாறு பொதுமக்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## முதலீட்டுத் துறைகளின்... 03ஆம் பக்கத் தொடர்

பணிப்பாளர் நாயகம் ரேணுகா என்.வீரகோன் கூறியதாவது,

முதலீடுகளுக்கான வசதிகளை வழங்கும் மத்திய நிலையத்தின் அடிப்படை நோக்கம் அமைச்சுகளுடனான ஒருங்கிணைப்புடன் முதலீட்டாளர்களை ஒரே இடத்தில் இணைத்து அந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை காண்பதாகுமென தெரிவித்தார்.

## யாத்திரை சென்றவர்களின்... 03ஆம் பக்கத் தொடர்

பாதுகாப்பான உணவை எடுத்துச் செல்லுமாறும், அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்துடன், முடிந்தளவு சுடுநீரை ஆறவைத்து உபயோகப்படுத்துவது சிறந்தது எனவும், அவர் தெரிவித்தார்.

## பெற்றோரிடம் ஒப்படைக்க ...

கைக்குழந்தையை ரயிலில் கைவிட்டுச் சென்றவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, இவர்கள் இருவரும் குழந்தையை பொறுப்பேற்கத் தயாரென நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இவர்கள் இருவரும் சட்டப்படி திருமணம் செய்வதற்கு தயாராகி வருவதாகவும், சட்டத்தரணி நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, கொழும்பு கோட்டை நீதவான் திலினி கமகே குழந்தையை பெற்றோரிடம் கையளிக்குமாறு உத்தரவிட்டார்.

மேலும், எதிர்வரும் 21ஆம் திகதி பெற்றோர் குழந்தையுடன் மரபணுப் பரிசோதனைக்காக ஆஜராக வேண்டும் எனவும், நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

## 'பூறு மூனா' எனப்படும் ...

செல்வதற்கும் நீதிமன்றத்தினால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 18ஆம் திகதி ஹங்வெல்ல பிரதேசத்திலுள்ள உணவகமொன்றின் உரிமையாளரை சுட்டுக் கொன்றதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

கடந்த 24ஆம் திகதி, சந்தேகநபர் வெளிநாடு செல்ல முற்பட்ட போது, கட்டுநாயக்க விமான நிலையப் பொலிஸாரால் கைது செய்து, காவலில் வைக்கப்பட்டிருந்த போது, இரு பிக்குகளின் உதவியுடன் இவ ர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இவர் மனிதப் படுகொலைகள் பலவற்றுக்கு பிரதான சூத்திரதாரியாக செயற்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

## தனியார் பல்கலை...

வங்கிகளின் வட்டி வீதம் பெருமளவு அதிகரித்துள்ளது. இதற்கான வட்டியும் 25 வீதத்துக்கு மேலாக செல்லும் என வங்கிகள் கூறுகின்றன.

இந்த நிலையில், இந்த வட்டியில் அரைவாசியை மாணவர்களிடமிருந்து அறவிடுவது என்ற யோசனை முன்வைக்கப்பட்டது.

எனினும், இந்த விவகாரத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலையிட்டு முழு வட்டியையும் நிதியமைச்சு பொறுப்பேற்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். அதற்கான வழிகாட்டல்களையும் நிதியமைச்சுக்கு அவர் வழங்கியுள்ளார்.

அத்துடன், இதற்கு முன்னர் ஒரு அரச வங்கியிலேயே இந்தக் கடன் வழங்கப்பட்டது. தற்போது அதற்காக மூன்று வங்கிகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன. அந்த வகையில் மக்கள் வங்கி, இலங்கை வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கியிலும் இந்தக் கடன்களை மாணவர்கள் பெற்றுக்கொள்ள முடியும். இந்தக் கடன் திட்டத்தில் தொழில்நுட்பப் பாடம் உள்ளிட்ட முக்கியமான பாடங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இந்த விடயம் தொடர்பாக நாம் பல பேச்சுவார்த்தைகளை நிதி அமைச்சில் மேற்கொண்டுள்ளோம். அதில் எட்டப்பட்ட முடிவுக்கு இணங்க கல்வியமைச்சானது விரைவில் அது தொடர்பான யோசனையை அமைச்சரவையில் முன்வைக்க நடவடிக்கை எடுக்கும்.

இதனைக் காலம் தாழ்த்தாது உடனடியாகவே நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளத" எனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## Listeria நோய் காரணமாக... 03ஆம் பக்கத் தொடர்

சொய்சா, இது தொடர்பான பரிசோதனைகள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றமையால், தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டாமென அறிவுறுத்தியுள்ளார்.

லிஸ்டிரியோசிஸ் (Listeriosis) என்பது லிஸ்டீரியா (Listeria) மோனோசைட்டோஜெனெஸினால் ஏற்படும் மிகக் கடுமையான பக்டீரியாத் தொற்று.

சில நேரங்களில், இந்நோயை ஏற்படுத்தும் பக்டீரியவின் பெயரைக் காரணமாகக் கொண்டு இது 'லிஸ்டீரியா' எனவும் அழைக்கப்படுகிறது.

இந்தத் தொற்றுநோய் ஆரம்பத்தில் உணவினால் ஏற்படுகின்றது, ஆகையால், பக்டீரியாக்கள் முதலில் குடலில் பாதிப்பேற்படுத்துகின்றன.

இது பொதுவாக கர்ப்பிணி பெண்கள் மற்றும் பலவீனமான நோய் எதிர்ப்பு அமைப்பை கொண்ட தனிநபர்களை பாதிக்கின்றதாகவும் கூறப்படுகின்றது.

## இலங்கைக்கு உரம் வழங்கியமை...

இருக்குமென, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தெரிவித்தார்.36,000 மெற்றிக்தொன் டிரிபிள் சூப்பர் போஸ்பேட் பொசுபேற்று உரம் தாங்கிய கப்பல் நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. இந்த உரம், யூ.எஸ் எய்ட் மற்றும் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பினால் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது. தமது டுவிட்டர் தளத்தில் கருத்து வெளியிட்டுள்ள அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், இது இலங்கைக்கு உதவியளிக்கும் அமெரிக்காவின் உறுதிப்பாட்டின் அடையாளமாகும் எனத் தெரிவித்துள்ளார்.

## உள்ளூராட்சி தேர்தல்...

பணம் மற்றும் பாதுகாப்பை பெற்றுத்தருமாறு நிதி அமைச்சுக்கும் பொலிஸ் திணைக்களத்துக்கும் அரச அச்சகர் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

இந்தக் கோரிக்கைக்கு பொலிஸ் திணைக்களத்திடமிருந்து உரிய பதில் கிடைத்துள்ள போதிலும், பணத்தை பெற்றுக்கொடுப்பது தொடர்பாக நிதி அமைச்சிடமிருந்து எவ்வித பதில்களும் இதுவரை கிடைக்கவில்லையென, இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார மேலும் தெரிவித்தார். இந்நிலையில், முன்னுரிமை அடிப்படையில் உள்ளூராட்சித் தேர்தலுக்கான நிதியை ஒதுக்குவது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லையெனத் தாம் நம்புவதாகவும் இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார சுட்டிக்காட்டினார்.

## வலி. கிழக்கு பிரதேச சபை...

அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.கோப்பாய் மானிப்பாய் வீதியிலமைந்துள்ள அவரது வீட்டுக்கு முன்பாக நேற்று முன்தினம் இரவு (16) இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு பிரதேச சபை உறுப்பினரும் அவரது மனைவியும் ஆலயத் திருவிழாவொன்றில் கலந்துகொண்ட பின்னர் வீடு திரும்பிக் கொண்டிருந்த போது, அவர்களை பின்தொடர்ந்த மூவர், அவர்களது வீட்டுக்கு முன்பாக வழிமறித்து மனைவி அணிந்திருந்த தங்கநகைகளை அறுக்க முற்பட்டுள்ளனர்.

பிரதேச சபை உறுப்பினரும் மனைவியும் தங்கநகைகளை அறுப்பதை தடுப்பதற்கு கொள்ளையர்களுடன் போராடிய போது, அவர்கள் இருவர் மீதும் சரமாரியாக வாளால் வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

காயமடைந்த இருவரையும் அயலவர்கள் மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். இதேவேளை, கொள்ளையர்களுடன் போராடி தங்கநகைகளையும் அறுத்துச் செல்லாது காப்பாற்றிக்கொண்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

## அமைச்சர் பந்துலவின் எண்ணக்கருவில்...

நடைபெற்றது.

அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தனவின் எண்ணக்கருவுக்கமைய பாடசாலை மாணவர்களுக்காக வருடந்தோரும் நடைமுறைப்படுத்தப்படும் “பிரக்ஞா பந்து” புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் இம்முறை உயர்தர தொழில்நுட்பம் கற்கும் 251 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குவதை முன்னிட்டு, அடையாள ரீதியாக 25 மாணவர்களுக்கு, பிரதமர் தினேஷ் குணவர்த்தன, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த ஆகியோரினால் வழங்கப்பட்டன.

நிகழ்வின் பிரதான உரையை சிரேஷ்ட திரைப்பட விமர்சகர் காமினி வேரகம நிகழ்த்தினார்.

கோட்டே ஸ்ரீ கல்யாணி சாமாகிரி தர்ம மகா சபையின் மகாநாயக்கவண, இத்தேபானே தம்மாலங்கார நாயக்க தேரர் தலைமையிலான மகா சங்கத்தினர், வெளிநாட்டு இராஜதந்திரிகள், தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள், அமைச்சர்கள் உள்ளிட்ட ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி அரசியல் பிரதிநிதிகள், கலைஞர்கள், ஊடக நிறுவனங்களின் தலைவர்கள், ஊடகவியலாளர்கள், தொழில் வல்லுநர்கள் உள்ளிட்ட அதிதிகள் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# உடுவில் இந்து இளைஞர் மன்றம் நடாத்தும் நாவலர் விழா

உடுவில் இந்து இளைஞர் மன்றம் நடாத்தும் நாவலர் விழாவும், பாலர் பாடசாலை மாணவர்களின் பரிசளிப்பு விழாவும் நாளை (10.03.2023) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 1.00 மணிக்கு உடுவில் மேற்கு பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினரின் நாவலர் நினைவுரை பிரதம விருந்தினரது உரையைத் தொடர்ந்து இப்பாடசாலையில் கல்வி பயின்று தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், பாடசாலையில் கல்வி கற்பித்து வெளியேறிய ஆசிரியர்கள் திருமதி கோ. தர்சினி, செல்வி ச. பானுப்பிரியா, திருமதி ச. கீர்த்தனா ஆகியோரை கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறும். இங்கு நவராத்திரி போட்டி, ஆங்கில தினப் போட்டி, ஆக்கத்திறன் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறுவதோடு கலைநிகழ்வுகளும் இடம்பெறும்.

மன்றத் தலைவர் தி. தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினராக சுப்பிரமணியம் ஐங்கரன் (உதவிப் பதிவாளர் யாழ். பல்கலைக்கழகம்), சிறப்பு விருந்தினராக சைவப்புலவர் பொன். சந்திரவேல் (கலாச்சார அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நன்றியுரையுடன் பாடசாலைக் கீதம் இசைக்கப்பட்டு விழா நிறைவுபெறும்.

## சட்டவிரோதமாக நுழைவோருக்கு...

பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட சூழலில், ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் கடல் வழியாக அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முயற்சித்தனர்.

இவ்வாறு சென்ற பலர், இலங்கை கடற்படையினராலும் அவுஸ்திரேலிய படையினராலும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறான ஆட்கடத்தல் சிக்கல் புதிய ஒன்றல்ல எனவும் பல ஆண்டுகளாக இருக்கும் பிரச்சினை எனவும், அவர் தெரிவித்தார்.

மேலும், இலங்கையிலிருந்து எந்தப் படகுகளும் அவுஸ்திரேலியாவை வந்தடையவில்லை. எந்த சட்டவிரோதக் குடியேறியும் இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியாவை வந்தடையவில்லை, எனவும் அவர் தெரிவித்தார்.

எனவே, அவுஸ்திரேலியாவில் தஞ்சம் கோருபவர்களுக்கு ஐ.நா. அகதிகள் முறைமை வழியாக விண்ணப்பங்கள் பரிசீலிக்கும் மனிதாபிமான குடியமர்த்தல் திட்டம் நடைமுறையில் இருப்பதாகவும், அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் ஸ்டீவன்ஸ் தெரிவித்தார்.

## பாராளுமன்றத்தைக் கலைத்து ...

செயலாளருக்கு சிறை செல்ல வேண்டியேற்படுமென்றும், அவர் தெரிவித்தார். எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (16) நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

"வேலைநிறுத்தப் போராட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்ட போதிலும் , ஜனாதிபதி ஊடகப்பிரிவு அவ்வாறு எதுவும் இடம்பெறவில்லையென்பதைப் போன்றே செய்திகளை வெளியிட்டுக் கொண்டிருந்தன.

இது தமது ஊடகப்பிரிவை பிரசித்தப்படுத்துவதற்கான போராட்டம் அல்ல என்பதை ஜனாதிபதி புரிந்துகொள்ள வேண்டும். அரசாங்கத்தின் வருமானம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதை கொள்கை ரீதியில் நாம் ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால், தற்போது அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வரிக்கொள்கை நியாயமானதல்ல. எனவே, நல்லாட்சி அரசாங்கத்தில் அப்போதைய நிதி அமைச்சர் மங்கள சமரவீர அறிமுகப்படுத்திய வரிக்கொள்கையை தற்போது நடைமுறைப்படுத்துமாறு வலியுறுத்துகின்றோம்.

## முன்னாள் எம்.பி. பியசேன...

விபத்தில் சிக்கியே அவர் உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் நேற்றுக் காலை பயணித்துக்கொண்டிருந்த அவர், மயானத்தின் பக்கம் திரும்ப முற்படுகையில் பொத்துவில் பிரதேசத்திலிருந்து பொலன்னறுவை நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸில் மோதுண்டு அவர் விபத்துக்குள்ளானார்.

விபத்தில் படுகாயமடைந்த அவர், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தபோதும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளதாக, வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன. அக்கரைப்பற்று பொலிஸார், விபத்துத் தொடர்பான விசாரணையை ஆரம்பித்துள்ளனர். வழமையாக இவர் மயானங்களுக்குச் சென்று துப்புரவு பணிகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

சம்பவ தினமான நேற்று வெள்ளிக்கிழமையும் அவர் மயானத் துப்புரவுப் பணிக்காக ஆலையடிவேம்புக்குச் சென்றதாக தெரிவிக்கப்படுகிறது.

1961ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி பிறந்த பொடி அப்புஹாமி பியசேன, 2010ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டு 11,139 வாக்குகளைப் பெற்று பாராளுமன்ற உறுப்பினராக தெரிவானார்.

## ஆரம்பக் கல்வி...

பாடசாலைகளுக்கு 1,000 மெற்றிக் தொன்அரிசிவழங்கப்படவுள்ளது.புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையினூடாக இத்திட்டம் செயல்படுத்தப்படும். இரு தரப்புக்குமிடையிலான உடன்படிக்கையே இவ்வாறு அமைச்சர் ஜீவன் தொண்டமானின் தலைமையில் அமைச்சில் கைச்சாத்திடப்பட்டது.

## சிறைச்சாலைகளில் நீண்டகாலமாக...

நடவடிக்கை எடுத்திருப்பதாகவும், நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

நீதி அமைச்சில் நேற்று முன்தினம் (16) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவித்த போது,

"பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வர்த்தமானி அறிவிப்பின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினூடாகவே இதுவரை புனர்வாழ்வளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த நிறுவனமூடாக விடுதலைப் புலிகள் அமைப்பின் செயற்பட்டாளர்களாக இருந்த 12,500க்கும் மேற்பட்டவர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர்.

அதன் பின்னர், போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வளிப்பதற்காக இந்த புனர்வாழ்வு பணியகத்தை பயன்படுத்த நடவடிக்கை எடுத்தோம்.

என்றாலும், போதைப்பொருளுக்கு அடிமையாகின்றவர்களை புனர்வாழ்வளிக்கும் நடவடிக்கை, இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படுவது தொடர்பாக பல்வேறு குற்றச்சாட்டுகள் தெரிவிக்கப்பட்டு வந்தன.

இதனை சிவில் நடவடிக்கையாக கருதி, பாராளுமன்றத்தில் சட்டமூலம் ஒன்றை அனுமதித்துக்கொண்டு, குறிப்பாக இராணுவத்தின் தீர்மானத்துக்கு அல்லாமல் மனநல வைத்திய சிகிச்சை முறைமைகளை பயன்படுத்திக்கொண்டு, போதைக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வளிக்க நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், இவ்வாறு புனர்வாழ்வளிக்கப்படுபவர்கள் நீதிமன்றத்தினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டவர்களாக இருக்கவேண்டுமென தெரிவிக்கப்பட்டது.

என்றாலும், நீதிமன்ற உத்தரவின் மூலம் ஒருவரை புனர்வாழ்வளிப்பதற்கு அனுப்பப்படுவது சம்பந்தப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு அது அகௌரவமாகும் என்று சமூக மட்டத்தில் தெரிவிக்கப்பட்டு வந்தது.

அதனால், சுய விருப்பத்துடன் யாராவது புனர்வாழ்வளிக்க முன்வந்தால், அவ்வாறானவர்களுக்கு புனர்வாழ்வளிக்க இந்த புனர்வாழ்வு பணியக சட்டம் மூலம் அனுமதிக்கப்படுகிறது. அதன் பொறிமுறையை தற்போது தயாரித்து வருகிறோம்.

அதேபோன்று, சிறைச்சாலைகள் ஒழுங்குவிதிகள் சட்டம் முழுமையாக திருத்தியமைக்கப்பட்டு, சிறைப்படுத்தப்படும் கைதிகளின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் மிகவும் மனிதாபிமான அடிப்படையிலான ஒழுங்குவிதிகளை உள்வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அத்துடன் நீண்டகாலம் சிறைப்படுத்தப்பட்டிருப்பவர்கள், குறிப்பாக வயது முதிர்ந்த, நாட்பட்ட நோயாளிகளாக இருப்பவர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு சுகாதாரப் பணிப்பாளரால் நியமிக்கப்படும் விசேட வைத்திய நிபுணர்கள் குழுவினால் முன்வைக்கப்படும் பரிந்துரைக்கமைய அவர்களின் பெயர்களை ஜனாதிபதிக்கு சமர்ப்பித்து, அவ்வாறான கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக தற்போதைக்கு சிலரின் பெயர் ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல், இன்னும் சிலரது பெயர் வைத்தியர் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. இவற்றையும் ஜனாதிபதி செயலகத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது" எனவும் தெரிவித்தார்.

## பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து ...

பாக்கு நீரிணைக் கடல் பகுதியை இராமேஸ்வரம் தீவும் அதனைத் தொடர்ந்துள்ள 13 மணல் தீட்டுக்களும் மன்னார் வளைகுடாவிலிருந்து பிரிக்கின்றன.

தமிழகத்திலேயே மிகவும் ஆழம் குறைந்த அதேசமயம், பாறைகளும் ஆபத்தான ஜெல்லி மீன்களும் நிறைந்த கடற்பகுதியும் இதுவே.

இதுவரை 4 பெண்கள் உட்பட 18 பேர், பாக்கு நீரிணையை தனியாக நீந்திக் கடந்து சாதனை புரிந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் இலங்கையின் தலைமன்னாரிலிருந்து இந்தியாவின் தனுஷ்கோடிக்கோ அல்லது தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னாருக்கோ நீந்திச் சென்றவர்கள். இது தவிர மேலும் சிலர் குழுவாக ரிலே முறையிலும் பாக்கு நீரிணைக் கடலை நீந்திக் கடந்துள்ளனர்.

ஆனால், ஓர் இடத்திலிருந்து புறப்பட்டு மறுபுறத்தை அடைந்த பின்பு தொடர்ச்சியாக மீண்டும் அங்கிருந்து புறப்பட்டு தொடங்கிய இடத்துக்கு வந்து சாதனை புரிந்தவர்கள் 3 பேர் மட்டுமே. அதில் முதலாமானவர், யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறை ஆழிக்குமரன் ஆனந்தன் என்றழைக்கப்படும் வி.எஸ்.குமார் ஆனந்தன். இவர் 1971ஆம் ஆண்டு தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடிக்கு நீந்திச்சென்று மீண்டும் தலைமன்னாருக்கு நீந்தி வந்தடைந்தார். மொத்தத் தூரத்தை 51 மணி நேரத்தில் நீந்திக் கடந்தார்.

அதன் பின்பு, இதே சாதனையை 11.4.2021இல் இலங்கை கடற்படையைச் சேர்ந்த ரோஷான் அபேசுந்தர, 28 மணி 19 நிமிடங்களில் நிகழ்த்தினார். கடந்த 29.03.2022 அன்று தமிழ்நாட்டில் தேனியைச் சேர்ந்த பள்ளி மாணவனான சினேகன், தனது 14ஆவது வயதில் 19 மணி 45 நிமிட நேரத்தில் தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னாருக்கு நீந்திச் சென்று மீண்டும் தனுஷ்கோடிக்கு நீந்திச் சாதனை படைத்தார்.

முன்னதாக பெங்களூரை சேர்ந்த தொழில்முறை நீச்சல் வீராங்கனையான சுஜேத்தா தேப் பர்மன் (40) தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னாருக்கு நீந்தி வந்து அங்கிருந்து மீண்டும் தனுஷ்கோடி வரையிலுள்ள பாக்கு நீரிணைக் கடற்பரப்பை இருபுறமாக நீந்திக் கடப்பதற்கான சாதனையை முன்னெடுத்தார். இவர் கடந்த வருடம் மார்ச் மாதம் காலை 8.23 மணியளவில் தனுஷ்கோடி அரிச்சல் முனையிலிருந்து நீந்தத் தொடங்கி 10 மணி 9 நிமிடங்கள் நீந்தி அன்று மாலை 6:33 மணியளவில் ஒருபுறமாக நீந்தி இலங்கையில் உள்ள தலைமன்னாரை அடைந்தார். தொடர்ந்து அங்கிருந்து மறுபுறமாக தனுஷ்கோடிக்கு நீந்திக் கொண்டு வரும்போது, அதிகாலை 2.09 மணியளவில் சர்வதேச கடற்பரப்பைத் தாண்டி நீந்தி வரும் போது, ஜெல்லி மீன்கள் கடித்ததால் பாதிக்கப்பட்டு தொடர்ந்து நீந்த முடியாமல் நீச்சலைக் கைவிட்டார்.

மீண்டும் தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னார் நீந்திச் சென்று அங்கிருந்து மீண்டும் தனுஷ்கோடிக்கு நீந்தி வருவதற்கு சுஜேத்தா தேப் பர்மன் இந்தியஇலங்கை இரு நாட்டு அரசாங்கத்திடமும் அனுமதி கோரி விண்ணப்பித்திருந்தார்.

அனுமதி கிடைதுள்ளதையடுத்து, சுஜேத்தா தேப் பர்மன் புதன்கிழமை மாலை 4.45 மணியளவில் தனுஷ்கோடி பழைய துறைமுகத்திலிருந்து நீந்தத் தொடங்கி 12 மணி 15 நிமிடங்கள் நீந்தி நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் ஒருபுறமாக நீந்தி இலங்கையிலுள்ள தலைமன்னாரை அடைந்தார்.

தொடர்ந்து உடனே மறுபுறமாக தலைமன்னாரிலிருந்து மீண்டும் தனுஷ்கோடி நோக்கி நீந்தத் தொடங்கி வியாழக்கிழமை பகல் 12.20 மணியளவில் தனுஷ்கோடி அரிச்சல்முனை வரை நீந்திக் கரையை அடைந்தார். 62 கிலோ மீற்றர் தூரத்தை 19 மணி 31 நிமிடங்கள் சுஜேத்தா தேப் பர்மன் நீந்தி கடந்து புதிய சாதனை படைத்துள்ளார்.

இதன் மூலம் முதன்முறையாக தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னாருக்கு இரண்டு முறை நீந்திக் கடந்தவரென்ற சாதனையையும் தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னாருக்கு நீந்திச் சென்று மீண்டும் தனுஷ்கோடிக்கு நீந்தி பாக்கு நீரிணைக் கடற்பகுதியை கடந்த முதல் பெண் என்ற சாதனையையும் சுஜேத்தா தேப் பர்மன் நேற்று முன்தினம் படைத்தார்.

மேலும் தேனியைச் சேர்ந்த சினேகனின் சாதனையையும் அவர் முறியடித்துள்ளார்.

## தமிழ் அரசியல் கைதி...

கிளிநொச்சி வைத்தியசாலை அம்பியூலன்ஸ் வண்டிச் சாரதியாக அவர் இருந்த வேளை , கடந்த 2008ஆம் ஆண்டு பணி நிமித்தம் கிளிநொச்சியிலிருந்து கொழும்பு நோக்கி வண்டியில் பயணித்துக்கொண்டிருந்த போது, வவுனியா தேக்கவத்தை பகுதியில் வைத்து பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

விடுதலைப்புலிகளுக்கு உதவினாரென குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. 2011ஆம் ஆண்டு நீதிமன்றம், அவரைக் குற்றவாளியாக கண்டு, ஆயுள் தண்டனை விதித்தது. அதனை எதிர்த்து அவர் மேன்முறையீடு செய்திருந்தார்.

மேன் முறையீட்டு வழக்கு விசாரணைகள் நடைபெற்று வந்ததுடன் , கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அவருக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டது.

அதனையடுத்து, தனது மேன்முறையீட்டு மனுவை மீள கையேற்க கடந்த பெப்ரவரி 23ஆம் திகதி சட்டத்தரணி ஊடாக மனுவை நீதிமன்றத்தில் அவர் கையளித்தார். அதனையடுத்து, அவரின் மேன்முறையீடு மீளளித்தது.

அவரை விடுதலை செய்வதில் நீதி நிர்வாக செயற்பாடுகளில் ஏற்பட்ட கால தாமதம் காரணமாக நேற்றைய தினம் வெள்ளிக்கிழமையே அவருக்கு சிறைச்சாலையிலிருந்து விடுதலை கிடைத்தது.

## மைத்திரியின் மனு மீது...

ஐவரடங்கிய நீதியரசர்கள் குழு முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளுமாறு, மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று (17) உத்தரவிட்டுள்ளது.

இந்த மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, மேன்முறையீட்டு நீதிமன் றத்தின் தலைவர் நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஏ.மரிக்கார் ஆகியோரடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்றக் குழு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

அதன்படி, ஜூலை 31 மற்றும் ஓகஸ்ட் 9 ஆகிய திகதிகளில் இந்த மனு மீதான விசாரணை நடைபெறுமென்று, நீதிபதிகள் உத்தரவிட்டனர்.


உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலை தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என அருட்தந்தை சிறில் காமினி மற்றும் தாக்குதலுக்கு ஆளான ஒருவர் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் இந்த தனிப்பட்ட முறைப்பாடை தாக்கல் செய்திருந்தனர்.

முறைப்பாட்டை பரிசீலித்த கோட்டை நீதவான், முறைப்பாட்டில் சந்தேக நபராக குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுத்திருந்தார்.

கோட்டை நீதவான் விடுத்த அழைப்பாணை சட்டத்துக்கு முரணானதெனவும் தம்மை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு தெரிவித்து விடுக்கப்பட்ட அழைப்பாணை செல்லுபடியாகாதென உத்தரவு பிறப்பிக்குமாறும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது மனுவில் கோரியிருந்தார்.



















போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் கருத்தியலுக்கு அமைய ஏற்பாடு செய்யப்பட்ட "சதராவ தீபனீ" என்ற கௌரவிப்பு நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் (16) நடைபெற்றது. கலைப் படைப்புகளுக்குப் பங்களித்த கலைஞர்களைப் பாராட்டும் நிகழ்வு இங்கு இடம்பெற்றதுடன், தர்மசிறி பண்டாரநாயக்க, பராக்கிரம நிரியெல்ல, சிரில் விக்கிரமகே ஆகிய சிரேஷ்ட கலைஞர்களுக்கு ஜனாதிபதி விருதுகளை வழங்கினார். கலாநிதி பந்துல குணவர்தனவின் கலைத்துறை குறித்து, பேராசிரியர் பிரனீத் அபயசுந்தர, ரஞ்சித் குமார, அருண குணரத்ன, தினுஷ குடாகொடகே ஆகிய சிரேஷ்ட ஊடகவியலாளர்களால், தொகுக்கப்பட்ட "சுபந்து சினிமா வத" நூல் வெளியீடும் இந்நிகழ்வுக்கு இணையாக இடம்பெற்றது. பாடசாலை மாணவர்களுக்காக வருடந்தோறும் வழங்கப்படும் “பிரக்ஞா பந்து” புலமைப்பரிசில் இம்முறை உயர்தர தொழில்நுட்பம் கற்கும் 251 மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் கருத்திற்கு அமைய புலமைப்பரிசில் வழங்குவதை முன்னிட்டு, அடையாள ரீதியாக 25 மாணவர்களுக்கு, பிரதமர் தினேஷ் குணவர்தன, முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன, கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த ஆகியோரினால் புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

*(படங்கள்: சுலோச்சன கமகே,சுதத் மலவீர)*

# மலைச்சாரல்



## கடும் மழை;
# பொகவந்தலாவை சென்மேரீஸ் தேசிய மத்திய கல்லூரியின் கல்வி நடவடிக்கைகள் பாதிப்பு



கடும் மழை காரணமாக ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட பொகவந்தலாவை சென்மேரீஸ் தேசிய மத்திய கல்லூரின் கல்வி நடவடிக்கை பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக கல்லூரியின் அதிபர் ஏ.வேலுசாமி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மாலை வேளையில் பெய்த கடும் மழை காரணமாக கல்லூரிக்கு அருகாமையிலுள்ள ஆறு பெருக்கெடுத்தமையால் கல்லூரி மண்டபங்களுக்குள் வெள்ள நீர் உட்புகுந்துள்ளது. நேற்றையதினம் காலை வேளையில் மாணவர்கள் கல்லூரிக்கு வருகை தந்த போதிலும் கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் போயுள்ளதாக தெரியவருகிறது.

அனைத்து வகுப்பறைகளும் சேறும் சகதியுமாக காணப்பட்டதையடுத்து மாணவர்கள் சுத்தம் செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

அத்தோடு சில கட்டடங்களில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத காரணத்தினால் தரம்.07, தரம்08, தரம்;09, தரம் 11 ஆகிய வகுப்பு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதோடு உயர்தர வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களை வீட்டுக்கு திருப்பி அனுப்பியுள்ளதாக அதிபர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை கல்லூரியின் அருகாமையில் காணப்படும் ஆற்றினை அகலப்படுத்தி தருமாறு மாணவர்களும் கல்லூரியின் பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது குறித்து கவனம் செலுத்த வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கின்றனர்.

# புதிய ஓர்கிட் இனம் கண்டுபிடிப்பு





**அக்குறணை குறூப் நிருபர்**

இலங்கைக்கே உரித்தான புதிய ஓர்கிட் இனமொன்று அண்மையில் சப்ரகமுவ மாகாணத்தில் காணப்படுவதாக பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்ட கள ஆய்வொன்றின் மூலம் கண்டுபிடித்துள்ளனர்.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது,

ஓர்கிட் இனம் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து இலங்கைக்கே உரித்தான ஓர்கிட் இனங்களின் எண்ணிக்கை 63 ஆக உயர்ந்துள்ளதுடன் இலங்கையிலுள்ள மொத்த ஓர்கிட் இனங்களின் எண்ணிக்கை 194 ஆகவும் அதிகரித்துள்ளது.

அத்துடன் இந்த ஓர்கிட் இனத்திற்கு இலைகள் கிடையாது, பூ மட்டுமே வெளிவருகிறது. இத்தாவர இனம் புஷ்பராகம் வகையைச் சேர்ந்த மாணிக்கக்கற்களின் நிறத்தை ஒத்ததாக இருப்பதுடன் மாணிக்கக்கல் காணப்படும் இரத்தினபுரி பிரதேசத்தில் காணப்பட்ட காரணத்தாலும் சூழலியலாளர்கள் இதனை புஷ்பராகம் என அழைக்க முன்வந்துள்ளனர்.

வெகுவிரைவில் இந்த தாவர இனம் பற்றிய வெளியீட்டு வைபவம் ஒன்று இடம்பெறவுள்ளதாகவும் பேராதனைப் பல்கலைக்கழக ஆய்வு அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேற்படி தாவர இனம் பற்றிய ஆய்வுகள் இன்னும் பலராலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ் கொழும்பு பல்கலைக்கழகத்தில் மனித உரிமைகள் துறையில் முதுமாணி பரீட்சையில் அதிதிறமை சித்தியை பெற்று முதுமாணி பட்டத்தை பெற்றுள்ளார். தலவாக்கலை கிறேட் வெஸ்டன் கல்கந்தவத்தை தோட்டத்தை பிறப்பிடமாகக் கொண்ட இவர் கல்கந்தவத்தை பாடசாலை, கிறேட்வெஸ்டன் பாடசாலை மற்றும் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவர். அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கொழும்பு பல்கலைக்கழக முதுமாணி பட்டமளிப்பு விழாவில் இவருக்கான பட்டம் வழங்கப்பட்டது.

படம்:தலவாக்கலை குறூப் நிருபர்

# தொடரும் காடுகளுக்கு தீ வைக்கும் சம்பவங்கள்

**கினிகத்தேனை தினகரன் நிருபர்**

வட்டவளை தியகலைக்கு அருகில் அமைந்துள்ள நீர்வடிகாலமைப்பு நிறுவனத்திற்கு அருகில் காணப்படும் பற்றைக்கட்டு நேற்று முன்தினம் இனந்தெரியாதோரால் தீ வைக்கப்பட்டுள்ளது. இத்தீயினால் சுமார் இரண்டு ஏக்கருக்கு மேற்பட்ட பகுதி எரிந்துநாசமடைந்துள்ளது.

இப்பகுதியில் தீ வைக்கும் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெற்றுவருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது மலையகப் பகுதிகளில் அதிக உஷ்ணமான காலநிலை நிலவுகின்றது.



இவ்வாறான சாதகமான நிலையை பயன்படுத்தியே தீ வைக்கும் சம்பவங்கள் இடம்பெற்றுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# அகில எல்லாவல எம்.பியின் மெய்ப் பாதுகாவலரின் கைத்துப்பாக்கி மாயம்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அகில எல்லாவல எம்.பியின் பாதுகாப்பு உத்தியோகத்தரின் கைத்துப்பாக்கி காணாமல் போயுள்ளது. இவ்விடயமாக பாதுகாப்பு உத்தியோகத்தர் பலாங்கொடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

பிரபு பாதுகாப்பு அணியைச் சேர்ந்த இவர் சில தினங்களுக்கு முன்னர் விடுமுறைக்காக வீடு செல்லும் போது தன்னுடைய கைத்துப்பாக்கியைப் பாராளுமன்ற உறுப்பினரின் வீட்டில் உள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கான பாதுகாப்பு அறையில் வைத்து விட்டு சென்றதாகவும் விடுமுறை முடிந்து வந்து பார்த்தபோது துப்பாக்கியைக் காணவில்லை எனவும் பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். பலாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மடவளை நகரில் வடிகானால் பயணிகள் அசௌகரியம்

கண்டி வத்துகாமம் பிரதான வீதி, மடவளை நகரத்தின் பிரதான சந்தியில் பஸ்தரிப்பிடத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள வடிகானால் அங்கு வரும் பயணிகள் அசௌரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.பஸ்தரிப்பிடத்துக்கு வரும் பயணிகளுக்கு வடிகான் இடையூறாக உள்ளதுடன், மழைகாலங்களில் வெள்ளம் தேங்கி நிற்பதாக பயணிகள் சுட்டிக்காட்டுகின்றனர். வீதி அபிவிருத்திப்பணிகள் இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளமையால் இந்நிலைமை தோன்றியுள்ளது. எனவே, வடிகானை முறையாக அமைத்து வீதியை சீராக்குவதற்கு அல்லது இவ்விடத்திலிருந்து பஸ் தரிப்பிடத்தை மாற்றுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் பயணிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# முன்னாள் பிரதேசசபை தலைவர் வேலு யோகராஜூக்கு பிரியாவிடை நிகழ்வு





நுவரெலியா பிரதேச சபை தலைவர் வேலு யோகராஜின் பிரியாவிடை நிகழ்வு நேற்று நுவரெலியா ஹபர் லேக் வீதியில் அமைந்துள்ள சுற்றுலா விடுதியில் இடம்பெற்றது.

இதன்போது தவிசாளர் வேலு யோகராஜினால் கடந்த 05 வருடகாலமாக நுவரெலியா பிரதேச சபைக்காக மிகுந்த அர்ப்பணிப்புடன் சேவையினை பெற்றுக் கொடுத்தமைக்காக தனது கௌரவத்துடனான நன்றியினை தெரிவிக்கும் முகமாக இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது வருகை தந்த முக்கியஸ்த்தர்களுக்கு நினைவு சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மேலும் தன்னுடைய 05 வருடத்தில் அனைத்து மக்களுக்கும் பாரிய சேவைகளை மேற்கொள்ள சக்தியாகவிருந்த இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஸ்தாபனம், முன்னாள் அமைச்சர் அமரர் ஆறுமுகன் தொண்டமான் அவரது புதல்வர் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு மற்றும் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான், ஸ்தாபனத்தின் தலைவர் செந்தில் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன்,

ஏனைய கட்சியின் முக்கியஸ்த்தர்கள், மத்திய மாகாண ஆளுநர், மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், நுவரெலியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், பொலிஸ் அதிகாரிகள், நுவரெலியா பிரதேச சபையின் அனைத்து உறுப்பினர்கள் மற்றும் காரியாலய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள், ஏனைய அரச நிறுவன அதிகாரிகள் மற்றும் அன்பிற்கினிய பொது மக்கள் வியாபாரிகள் அனைவருக்கும் தனது நன்றிகளை தெரிவித்துக்கொண்டார்.

மேலும் நுவரெலியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்களினால் தவிசாளர் அவர்களுக்கு நினைவுச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நுவரெலியா உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், நுவரெலியா மற்றும் கொத்மலை, கொட்டகலை பிரதேச சபையின் அதிகாரிகள், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள், வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள், மின்சார சபையின் அதிகாரிகள், நுவரெலியா பொலிஸ் நிலைய அதிகாரிகள், நுவரெலியா பிரதேச சபை உறுப்பினர்கள் உத்தியோகஸ்த்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.



அறிவொளி அமைப்பின் ஊடாக லிந்துலை லிப்பகலை தோட்டத்துக்கு பழக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன. இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தையொட்டி அறிவொளி அமைப்பின் தலைவர் நல்லுசாமியினால் இந்த பழக்கன்றுகள் விநியோகிக்கப்பட்டன. இந்நிகழ்வில் தோட்ட முகாமையாளர், கிராம உத்தியோகத்தர்,அப்பகுதி அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் பலர் கலந்துக்கொண்டனர்.

படம்: தலவாக்கலை குறூப் நிருபர்

# மாவனல்லை பிரதேச சபை தலைவர் பதவி நீக்கம்

**இரத்தினபுரி சுழற்சி நிருபர்**

மாவனல்லை பிரதேசசபை தலைவர் தசந்த ஸ்டீவன் சபைத் தலைவர் பதவியிலிருந்தும் பிரதேச சபை உறுப்பினர் பதவியிலிருந்தும் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவவினால் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைய இவர் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் மீது சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணை அறிக்கைக்கு இணங்க இவர் இவ்வாறு பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மாடுகள் திருட்டு

கரடுகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிடகும்புர பிகிரிய பிரதேசத்தில் கடந்த அதிகாலை மாடுகள் இரண்டு திருடப்பட்டுள்ளதாக அவற்றின் உரிமையாளரால் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதாக கரடுகல பொலிஸார் தெரிவித்தனர்.

மாட்டின் உரிமையாளர், வீட்டுக்கு அருகிலுள்ள வயல்வெளியில் இரண்டு மாடுகளையும் கட்டி வைத்துள்ளார்.

மறுநாள் காலை, வயல்வெளிக்குச் சென்ற போது இரண்டு மாடுகளையும் யாரோ திருடிச் சென்றுள்ளமை தெரியவந்தது.

மாடுகள் கட்டப்பட்ட இடத்துக்கு அருகே வாகனமொன்று வந்திருந்தமைக்கான அடையாளங்கள் காணப்பட்டதுடன், திருடப்பட்டுள்ள இரு மாடுகளினதும் பெறுமதி சுமார் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பில் கரடுகல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மஸ்கெலியா புரவுன்சீக் தோட்ட மக்களுக்கு சுத்தமான குடிநீர்

**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**



மஸ்கெலியா பிரதேசசபைக்குட்பட்ட பகுதியில் ஆர்.பி.கே.பிளான்டேசனுக்கு உரித்தான மஸ்கெலியா புரவுன்சீக் தோட்டத்தில் நேற்று முன்தினம் 16ம் திகதி மதியம் சுத்தமான குடிநீர் 300 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது.

இலங்கையிலுள்ள எட்றா நிறுவனத்தினால் இத்திட்டம் கடந்த இரண்டு வருடங்களாக ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் தோட்ட நிர்வாகம் என்பவற்றுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. இந்நிகழ்வில் ஆர்.பி.கே.தோட்ட கம்பனி உயர் அதிகாரி மற்றும் எட்ரா நிறுவன அதிகாரிகள் நிதியுதவி வழங்கி உதவிய வெளிநாட்டு நிறுவன அதிகாரிகள் தோட்ட நிர்வாகம் தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

# தாழையடி குடிநீர் திட்டம் - கள ஆய்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா





வடமாராட்சி, தாழையடி கிராமத்தில் உருவாக்கப்பட்டு வரும் யாழ். கிளிநொச்சி மாவட்டங்களுக்கான உவர்நீரை குடிநீராக மாற்றும் திட்டத்தின் நிர்மாணப் பணிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பார்வையிட்டதுடன் இத்திட்டத்தினை செழுமைப்படுத்துவதற்கான ஆலோசனைகளையும் வழங்கினார்.

ஆசிய அபிவிருத்தி திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டில் இத்திட்டத்தினை உருவாக்கி வருகின்ற பிரான்ஸ் நாட்டை தலைமையகமாகக் கொண்ட சூயஸ் நிறுவனத்தின் கள அதிகாரிகள் உட்பட்ட அதிகாரிகளுடனும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடினார்.

சுமார் 14,559 மில்லியன் ரூபாய் நிதியுதவியில் உருவாக்கப்பட்டு வரும் இத்திட்டத்தின் மூலம் நாளாந்தம் சுமார் 24,000,000 லீற்றர் குடிநீர் உற்பத்தி செய்யப்பட்டு யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளது.

இத்திட்டத்தின் வேலைத்திட்டங்கள் இவ்வருட இறுதியில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுவதுடன் முதற்கட்டமாக மீசாலை வரையான கிராமங்களுக்கு குடிநீர் விநியோகத்தை ஆரம்பிப்பதற்கும் தொடர்ச்சியாக ஏனைய பிரதேசங்களுக்கு விநியோகத்தை விஸ்தரிப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. இத்திட்டத்தின் ஊடாக கிடைக்கின்ற நீரை தேசிய நீர் கட்டணத்தின் அடிப்படையில் மக்களுக்கு விநியோகிக்கவுள்ளதாகவும் அதிகாரிகளினால் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தாளையடி குடிநீர்த் திட்டத்தின் சமூக பாதுகாப்பு பங்களிப்பு திட்டத்திற்கு அமைவாக வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சமாசத்திற்கு வழங்குவதற்காக 58 இலட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்டு வரும் ஐஸ் தொழிற்சாலையையும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பார்வையிட்டார்.

ஐஸ் உற்பத்தி தொழிற்சாலையின் மூலம் நாளொன்றிற்கு 5000 கிலோ கிராம் ஐஸ் கட்டிகளை உற்பத்தி செய்ய முடியும் என்பதுடன், ஐஸ் உற்பத்திக்கு தேவையான மின்சாரத்தை பெற்றுக்கொடுப்பதற்கான சூரிய கலங்களும் பொருத்தப்பட்டுள்ளமையினால் குறைந்த செலவில் ஐஸ் கட்டிகளை கடற்றொழிலாளர்கள் பெற்றுக்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட

# சிறைத்தண்டனையுடன் இந்திய மீனவர்கள் விடுவிப்பு

## படகுகள் அரசுடமை

**கரவெட்டி தினகரன் நிருபர்**

வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 12 பேரும் நிபந்தனையுடன் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

12 மீனவர்களுக்கும் 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒன்றரை வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

12 மீனவர்களும் கடந்த ஞாயிற்றுக்கிழமை வடக்கு கடற்பரப்பில் கைது செய்யப்பட்டு கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இந்நிலையில் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் பருத்தித்துறை நீதிமன்றத்தில் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு 12 மீனவர்களுக்கும் 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒன்றரை வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அவர்கள் பயன்படுத்திய படகு அரசுடமையாக்கப்பட்டுள்ளது. குறித்த பன்னிரண்டு மீனவர்களையும் இந்தியாவிற்கு அனுப்பும் பணிகளில் இந்திய துணை தூதரகம் ஈடுபட்டு வருகின்றது.

# கோப்பாய் வைத்தியசாலைக்கு மருத்துவ உதவிகள் கையளிப்பு

**கரவெட்டி தினகரன் நிருபர்**

கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு ரூ. 5 இலட்சம் பெறுமதியான மருந்துகள் சந்நிதியான் ஆச்சிரமத்தால் நேற்றுமுன்தினம் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

தற்போது வைத்தியசாலையில் மருந்துப்பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவிவரும் வேளையில் வைத்தியசாலையின் கோரிக்கைக்கு அமைவாக ரூ.500,798.00 பெறுமதியான மருந்து வகைகள் வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரியிடம் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கௌரவ கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தனது தொண்டர்களுடன் சென்று வழங்கி வைத்தார்.

இதேவேளை வடமராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட கரணவாய் தாமோதர வித்தியாலயத்திற்கும் ரூ.280,000/ பெறுமதியில் பாதுகாப்பான குடிநீர் வசதி செய்து கொடுக்கப்பட்டு நேற்றைய தினம் ஆச்சிரமத்தால் கையளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், ஆச்சிரம தொண்டர்களும் கலந்து கொண்டனர்.

# முப்படைகளின் தளபதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம்

**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் – நாவற்குழியில் விகாரையில் இடம்பெறும் நிகழ்வில் பங்கேற்கும் வகையில் இன்றையதினம் சனிக்கிழமை முப்படைகளின் தளபதி சவேந்திர சில்வா யாழ். வருகை தரவுள்ளார்.

நாவற்குழியில் அமைந்துள்ள விகாரையில் புதிதாக அமைக்கப்பட்ட பகுதியில் இடம்பெறும் நிகழ்வில் பங்கேற்பதற்காகவே அவர் இவ்வாறு வருகை தரவுள்ளார்.

சவேந்திர சில்வா வருகை தரும் நிகழ்விற்காக தென்னிலங்கையிலிருந்து 128 பௌத்த பிக்குகளும் அழைத்து வரப்படுகின்றனர்.

இந்நிகழ்வுகளை முன்னிட்டு நேற்று காலை பிரிந்பாராயணம் முதல் விசேட பூசை ஏற்பாடுகள் என்பன முன்னெடுக்கப்பட்டன.

# எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களுக்கு மிரட்டல்; சந்தேக நபர்கள் கைது

**சாவகச்சேரி விசேட நிருபர்**

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கைதடி பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களுக்கு மிரட்டல் விடுத்த இருவர் நேற்று காலை சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்பாக எரிபொருள் நிரப்பு நிலையத்தில் திருத்த வேலை இடம்பெற்ற போது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் எரிபொருள் வழங்காமையைக் காரணம் காட்டி ஊழியர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்து விட்டு சென்றிருந்தனர்.

இந்நிலையில் சி.சி.ரி.வி கமராவினை ஆதாரமாகக் கொண்டு இதுதொடர்பாக வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

நல்லூர் மற்றும் அரியாலைப் பகுதியைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டிருப்பதுடன், மிரட்டல் விடுப்பதற்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றி மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# யாழ்ப்பாண மாவட்டத்தில் 1814 கர்ப்பிணிகள் வறுமையால் பாதிப்பு

**கோப்பாய் குறூப் நிருபர்**

யாழ்.மாவட்டத்தில் 1814 கர்ப்பிணிகள் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட செயலகப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

நாட்டில் ஏற்பட்ட கொரோனா இடர் காலத்துக்கு பின்னர் ஏற்பட்ட பொருளாதார நிலைமை காரணமாக பல கர்ப்பிணிப்பெண்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்களில் கோப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் 370 கர்ப்பிணிப்பெண்கள் வறியநிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் 226 கர்ப்பிணிப் பெண்களும், சங்கானைப் பிரதேச செயலகத்தில் 157 கர்ப்பிணிகளும், தெல்லிப்பழை பிரதேச செயலக பிரிவில் 139 கர்ப்பிணிகளும், யாழ்ப்பாண பிரதேச செயலகப் பிரிவில் 138 கர்ப்பிணிகளும், கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவில் 128 கர்ப்பிணிகளும் சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவில் 118 கர்ப்பிணிகளும் உடுவில் பிரதேச செயலகப் பிரிவில் 117 கர்ப்பிணிகளும்.

மருதங்கேணி பிரதேச செயலகப் பிரிவில் 98 கர்ப்பிணிகளும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகப் பிரிவில் 97 கர்ப்பிணிகளும், நல்லூர் பிரதேச செயலகப் பிரிவில் 91 கர்ப்பிணிகளும் , காரைநகர் பிரதேச செயலகப் பிரிவில் 40 கர்ப்பிணிகளும்,வேலணைப் பிரதேச செயலகப் பிரிவில் 49 கர்ப்பிணிகளும் ஊர்காவற்துறை பிரதேச செயலகப் பிரிவில் 25 கர்ப்பிணிகளும் ,நெடுந்தீவு பிரதேச செயலகப் பிரிவில் 21 கர்ப்பிணிகளும் ஆக 1814 பேர் வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அதே நேரம் அரசாங்கத்தினால் கர்ப்பிணிகளுக்கு வழங்கப்படும் 2ஆயிரம் ரூபா கொடுப்பனவு 8 மாதங்களுக்கு மேலாக வழங்கப்படாமல் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மனை பொருளியல் டிப்ளோமா கண்காட்சி

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

வடமாகாண கிராம அபிவிருத்தி திணைக்கள நிதி அனுசரணையில் மாந்தை கிழக்கு பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையம் இணைந்து நடாத்தும் மனை பொருளியல் டிப்ளோமா கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் நேற்றையதினம் பாண்டியன்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்றது

மாந்தை கிழக்கின் உதவி பிரதேச செயலாளர் ப. ஜெபமயூரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், விருந்தினர்களை வரவேற்றல், கண்காட்சியை ஆரம்பித்து வைத்தல், விழா சுடரேற்றல், இறைவணக்கம், கண்காட்சியை பார்வையிடல், கலை நிகழ்வுகள், விருந்தினர்கள் உரை என்பன இடம்பெற்றிருந்தன. பிரதம விருந்தினராக மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் செல்வி ந.நிரஞ்சனா, துணுக்காய் பிரதேச செயலாளர் ச.லதுமீரா, கௌரவ விருந்தினர் திரு.சி. உமாபாலன் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

வேரவில் சீமெந்து தொழிற்சாலை

# சாதக, பாதகத் தன்மையை ஆய்வு செய்யுமாறு கோரிக்கை

**யாழ்.விசேட நிருபர்**



கிளிநொச்சி மாவட்டம், பூநகரி பிரதேசத்தின் பொன்னாவெளி கிராம அலுவலர் பிரிவிலுள்ள வேரவில் கிராமத்தில், சீமெந்து தொழிற்சாலையொன்றை அமைப்பதற்கான முயற்சிகள் மிகத் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதால் அதன் சாதக, பாதகத் தன்மையை ஆய்வுக்குட்படுத்தக் கோரி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தருக்கு, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் எழுத்துமூலக் கோரிக்கை ஒன்றை அனுப்பிவைத்துள்ளார்.

இக்கோரிக்கைக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது;

கிராஞ்சி கிழக்கு, கிராஞ்சி மேற்கு, மொட்டையன்குளம், பிருந்தாவனம், மதனி குடியிருப்பு, வலைப்பாடு, பொன்னாவெளி, பாலாவி ஆகிய கிராமங்கள் சூழவுள்ள இப்பிரதேசத்தில் 1156 குடும்பங்களைச் சேர்ந்த 4276 இற்கும் அதிகமான மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

கடற்புறச்சூழலியல் கொண்ட பிரதேச மக்கள் ஏற்கனவே குடிநீர்த்தட்டுப்பாட்டை எதிர்கொள்ளும் நிலையில், தமது பகுதியில் புதிதாக ஓர் சீமெந்து தொழிற்சாலை அமைக்கப்படுமாயின் அது தமது இருப்பைக் கேள்விக்குட்படுத்தக்கூடிய அபாயகரமான சூழலைத் தோற்றுவிக்கும் என்ற இயல்பான அச்சத்திற்கு உட்பட்டவர்களாக உள்ளனர். அதுபற்றிய தெளிவுபடுத்தல்களை பெற்றுக் கொள்ள முடியாத நிலையிலுள்ளனர்.

எமது மக்களின் உணர்வுநிலைகளோடு என்றும் ஒருமித்திருக்கும் நிறுவனமான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தன்சார் சமூகத்தின் இருப்புக்காக ஆற்றக்கூடிய சமூகநலன் சார் பணிகளில் ஒன்றாக இதனைக் கருதி, வேரவில் பிரதேசத்தில் சீமெந்து தொழிற்சாலை ஒன்றை அமைப்பதால் எமது மக்களின் இயல்புவாழ்வில் ஏற்படக்கூடிய குடிநீர் உள்ளிட்ட சூழலியல் இடர்பாடுகள் பற்றிய தெளிவினை ஏற்படுத்துவதற்காக, துறைசார் பேராசிரியர்களும் மாணவர்களும் இணைந்து ஓர் முழுமையான ஆய்வை மேற்கொள்வதன் மூலம், அப்பிரதேச மக்களுக்கும் எமது சமூகத்துக்கும் இதன் சாதக, பாதக தன்மைகள் குறித்த தெளிவுபடுத்தலை ஏற்படுத்த முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன் என அவர் தெரிவித்தார்.

# அரச ஓய்வூதியம் பெறுவோர் சங்கத்தின் 35 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம்



**தலைமன்னார் விசேட நிருபர்**

மன்னார் மாவட்டத்தில் கூடிய அங்கத்தவர்களைக் கொண்டு சிறந்த முறையில் இயங்கிவரும் மன்னார் மாவட்ட அரச ஓய்வூதியம் பெறுவோர் சங்கத்தின் 35 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை (16) மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் மன்னார் மாவட்டத்திலுள்ள ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளிலுள்ள அரச ஓய்வூதியம் பெறுவோர் கலந்து கொண்டனர்.

இச்சங்கத்தின் தலைவர் எஸ். சூசைதாசன் தலைமையில் இவ்வருடாந்த கூட்டம் நடைபெற்றது.

மன்னார் மாவட்டத்திலுள்ள ஐந்து பிரதேச செயலகப்பிரிவுகளிலும் 827 ஓய்வூதியம் பெறுவோர் இச்சங்கத்தில் உறுப்பினர்களாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதன்பிரகாரம் மன்னார் பிரதேச செயலகப் பிரிவில் 535 ஓய்வூதியம் பெறுவோரும், நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவில் 197 நபர்களும். முசலி பிரதேச செயலகப் பிரிவில் 21 பேரும். மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் 43 நபர்களும் மற்றும் மடு பிரதேச செயலகப் பிரிவில் 31 பேரும் மொத்தம் 827 ஓய்வூதியம் பெறுவோர் இவ் சங்கத்தில் உறுப்பினர்களாக இணைந்து இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

# யாழில் உழவு இயந்திரத்துடன் ஒருவர் கைது


**யாழ்.விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் அனுமதிப் பத்திரம் இல்லாமல் மலைவேம்பு மரத்தை வெட்டி எடுத்துச் சென்ற ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், உழவு இயந்திரம் மற்றும் மரக்குற்றிகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை உழவு இயந்திரத்தில் மரங்களை ஏற்றிச் சென்ற நபரை பொலிஸார் மறித்து அனுமதிப் பத்திரத்தை கேட்ட போதே இவர்களிடம் அனுமதிப்பத்திரம் இருக்கவில்லை. இதனால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது கைப்பற்றப்பட்ட உழவு இயந்திரத்திற்கும் எந்தவொரு ஆவணங்களும் இல்லை எனவும், கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரையும், கைப்பற்றப்பட்ட பொருட்களையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# கிழக்கின் குரல்



# ஊருக்குள் நுழைந்த பாரிய காட்டு யானைக் கூட்டம்

மட்டக்களப்பு குறூப் நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் மாவடிப்பள்ளி பிரதேசத்தில் ஊருக்குள் நுழைந்த பாரிய யானைக் கூட்டத்தால் மக்கள் மத்தியில் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டதுடன் போக்குவரத்திற்கும் சிறிது நேரம் பாதிப்பு ஏற்பட்டது.

நேற்று முன்தினம் மாலை (16) சம்மாந்துறை பகுதி காடுகளுக்குளிருந்து மாவடிப்பள்ளி பிரதேசத்திற்குள் நுழைந்த இக்காட்டுயானைக் கூட்டம் வயல் நிலங்களை நாசம் செய்து விட்டுச் சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்மைய நாட்களில் அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளமையால் மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.



கடந்த சில தினங்களுக்கு முன்னர் காரைதீவு பிரதேசத்தில் அறுவடை செய்து வைக்கப்பட்டிருந்த 350 நெல் மூடைகளை நாசமாக்கியதும் குறிப்பிடத்தக்கது.

## வீதிகளில் பொது மக்களுக்கு தொல்லை ஏற்படுத்தியவர்களுக்கு

### நீதிமன்ற அழைப்புக் கட்டளை விடுப்பு

ஒலுவில் விசேட நிருபர்

அக்கரைப்பற்று மாநகர சபைக்குட்பட்ட பிரதான வீதிகளில் பொது மக்களுக்கு தொல்லை ஏற்படுத்திய பிரதிவாதிகளுக்கு அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றினால் நீதிமன்ற அழைப்புக் கட்டளை விடுக்கப்பட்டுள்ளது.

அக்கரைப்பற்று மாநகர சபைக்குட்பட்ட பிஸ்கால் சந்தி மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களிலுள்ள வீதிகளில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களால் பொது மக்களுக்கு தொல்லை ஏற்படுவதாகவும், சனநெரிசல் அதிகரித்து காணப்படுவதால் விபத்துகள் ஏற்படுவதாகவும் தெரிவித்து அவர்களுக்கெதிராக அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இவ்வழக்கு விசாரணை செவ்வாய்க்கிழமை (14) அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.எச். எம். ஹம்ஸா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்ட போது பொது தொல்லை ஏற்படுத்தியவர்களுக்கு நீதிமன்ற அழைப்புக் கட்டளை விடுமாறும், குறித்த இடத்தில் நீதிமன்ற கட்டளையை காட்சிப்படுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார்.

இவ் வழக்கு விசாரணை எதிர்வரும் ஏப்ரல் 06ம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

## கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது

பாலமுனை தினகரன் நிருபர்

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோளாவில், ராண்ஸ் போமர் வீதியில் கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸாருக்கு கிடைக்கப்பட்ட இரகசிய தகவலின் படி பொலிஸ் பரிசோதகர் பகிதரன், பொலிஸ் சாஜன்களான தாஹீர், அனஸ் ஆகியோர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த பிரதேசத்திற்கு சென்று நபர் ஒருவரை கைது செய்துள்ளதுடன் அவரிடமிருந்த 700 மில்லி கிராம் கேரள கஞ்சாவையும் கைப்பற்றியுள்ளனர்.

## மர்ஹூம் வை.எம்.ஹனீபாவின் பெயரை சாய்ந்தமருது வீதியொன்றுக்கு சூட்டுமாறு கோரிக்கை

மாளிகைக்காடு குறூப் நிருபர்

சாய்ந்தமருது பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் தலைவராகப் பணியாற்றி, தனியான நகர சபைக்கான போராட்டம் உட்பட ஊர் நலன்சார் விடயங்களில் அர்ப்பணிப்புடன் முன்னின்று உழைத்த ஓய்வுபெற்ற அதிபர் மர்ஹூம் அல்ஹாஜ் வை.எம். ஹனிபாவின் பெயரை சாய்ந்தமருதிலுள்ள வீதியொன்றுக்கு சூட்டுமாறு சாய்ந்தமருதிலுள்ள பொது அமைப்புகள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளன.

இதற்கு மேலதிகமாக கல்முனை மாநகர சபையின் 49ஆவது மாதாந்த பொதுச் சபை அமர்வின் போது மாநகர சபையின் சாய்ந்தமருது சுயேட்சைக்குழு உறுப்பினர் எம்.ஏ. அப்துல் றபீக் இதற்கான பிரேரணையை சமர்ப்பித்திருந்தார்.



தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் உடற்கல்விப் பீட பொறுப்பாளராக கிழக்கு மாகாண கராத்தே சம்மேளனத்தின் தலைவரும், சர்வதேச மாஸியல் சம்மேளனத்தின் தலைவரும், தென் கிழக்கு பல்கலைக்கழகத்தின் கராத்தே பயிற்றுவிப்பாளருமான சாய்ந்தமருதைச் சேர்ந்த முஹம்மது இக்பால் நியமிக்கப்பட்டுள்ளார். தென் கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி றமீஸ் அபூபக்கரிடமிருந்து அதற்கான நியமனக் கடிதத்தை வழங்கியுள்ளார்.

## காணிப் பிரச்சினை; கிழக்கு மாகாண அரசியல் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல்

பெரியபோரதீவு தினகரன் நிருபர்

மூவின மக்களும் கிழக்கு மாகாணத்தில் எதிர்நோக்கும்; காணிப் பிரச்சினைகள் தொடர்பாகவும் தேசிய காணிக் கொள்கைக்கான பரிந்துரை தொடர்பாகவும் கிழக்கு மாகாண அரசியல் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் ஒன்றை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (19) நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக காணி உரிமைகளுக்கான அம்பாறை மாவட்ட செயலணியின் இணைப்பாளரும் மனித எழுச்சி அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான கே. நிஹால் அஹமட் தெரிவித்தார்.

அட்டப்பள்ளம் நிந்தவூரிலுள்ள தோம்புக் கண்டம் விடுதியில் அன்றைய தினம் காலை 10 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாணம் மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ் முஸ்லிம், சிங்கள சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் பிரமுகர்களுக்கும் அழைப்புக்கள் விடுக்கப்பட்டுள்ளது.

மக்கள் காணி ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வுக்கான அழைப்புக்கள் கிழக்கு மாகாணத்திலுள்ள மூவின சமூகங்களின் அரசியல் பிரதிநிதிகளுக்கும் கையளிக்கப்பட்டுள்ளதாக நிஹால் அஹமட் தெரிவித்தார்.

காணிகள் விடயத்தில் சகல சமூகத்தாரும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். கடந்த 30 வருடங்களுக்கு மேலாக தீர்வின்றித் தொடரும் இந்தக் காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் எட்டப்பட வேண்டும். காணிப் பிரச்சினைகளில் இருந்து விடுபடுவதற்கான வழிவகைகளைக் கண்டறிவதற்கும் தேசிய காணி கொள்கைக்கான பரிந்துரைகளை மேற்கொள்வதற்கும் இந்தக் கலந்துரையாடல் வாய்ப்பளிக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கொங்கிரிட் வீதிக்கு மேல் கார்ப்பட் வீதியா?

### பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் கேள்வி

காரைதீவு குறூப் நிருபர்

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் பிறந்த விபுலானந்த வீதி இன்று அரைகுறையாக காணப்படுகிறது. ஏலவே கொங்கிறீட் வீதியாக இருந்த இவ் வீதிக்கு மேலாக இப்போது அரைகுறையாக கார்ப்பட் வீதி போடப்பட்டுள்ளது. அதனை சீர் செய்து தர வேண்டும் .

இவ்வாறு காரைதீவு பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

காரைதீவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஒருங்கிணைப்பு குழுத்தலைவருமான எஸ். எம். எம். முஷரப் தலைமையில் மேற்படி கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்ற போதே பொதுமக்கள் சார்பில் ஊடகவியலாளர் வி.ரி.சகாதேவராஜா மேற்படி வேண்டுகோளை விடுத்தார்.

அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா காலகட்டத்தில் பொதுமக்களிடமோ பிரதேச செயலாளரிடமோ அல்லது தவிசாளரிடமோ எந்த சம்மதமும் ஒப்புதலும் விருப்பமும் பெறப்படாமல் தன்னிச்சையாக இரண்டடி உயரத்துக்கு இந்த கார்ப்பட் வீதிக்கு கொங்கிறீட் மேலால் போடப்பட்டது.

ஆனால், வீதியின் இரு பக்கமும் எத்தகைய வடிகானும் இல்லாமல் அரைகுறையாக போடப்பட்டிருக்கின்றது. இதனால் பொதுமக்களும் பாதசாரிகளும் வாகனமோட்டிகளும் பலத்த அசௌகரியத்தை எதிர் கொண்டு வருகின்றனர்.



எனவே இதனை சீர்செய்து மக்கள் பாவனைக்கு விடவேண்டும். இல்லாவிட்டால் இதை கணக்காய்வுப்பிரிவுக்கு சமர்ப்பித்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மேலும், காரைதீவை ஊடறுக்கும் கரைச்சை ஏரிக்கு மேல் போடப்பட்ட பாலங்கள் உடைந்து விழும் தறுவாயிலுள்ளது. பெரும் அனர்த்தம் நிகழமுன்பு அப்பாலங்கள் புனரமைக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

அவற்றை செவிமடுத்த பாராளுமன்ற உறுப்பினர் முஷரப், சபையிலிருந்த வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளரை வினவி விளக்கம் கேட்டார். இதனை சீர் செய்து கொடுக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

## 'காலாறப் போனவள்' கவிதை நூல் திருகோணமலையில் அறிமுக விழா



அன்புவழிபுரம் தினகரன் நிருபர்

கவிஞர் லலித கோபன் எழுதிய 'காலாறப் போனவள்' கவிதை நூல் அறிமுக விழா ஓய்வு நிலை கோட்ட கல்விப் பணிப்பாளர் சீ. மதியழகன் தலைமையில் திருகோணமலை நகர சபை பொது நூலக கேட்போர் கூடத்தில் (18) சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

நிகழ்வின் பிரதம அதிதியாக மகுடம் சஞ்சிகையின் ஆசிரியர் வி. மைக்கல் கொலினும், சிறப்பு அதிதியாக நீங்களும் எழுதலாம் கவிதை சஞ்சிகையின் ஆசிரியர் எஸ். ஆர். தனபாலசிங்கமும், கௌரவ அதிதிகளாக திருகோணமலை உயர் தொழில்நுட்ப வளாகத்தின் ஆங்கிலத்துறைத் தலைவர் மா. தமிழ்ச்செல்வன், ஆங்கில விரிவுரையாளர் த. ஜீவகன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கின்றனர்.

நூல் பற்றிய உரைகளை கவிஞர்களான றியாஸ் குரானா, சி. கருணாகரன், க . டனிஸ்கரன் விமர்சகர்களான சுதர்மமகாராஜன், வ. முரளிதரன் ஆகியோர் வழங்குவார்கள்.

ஜம்மு – காஷ்மீரை

## மேற்கு இந்திய துறைமுகங்களுடன் இணைக்கும் பெருவழித்தெரு திட்டம் விரைவில் ஆரம்பமாகும்

வட இந்திய கைத்தொழில் மற்றும் விவசாய பிரதேசங்களை மேற்கு இந்தியாவின் துறைமுக நகரங்களுடன் இணைக்கும் அமிர்தசரஸ், டில்லி மற்றும் கொல்கத்தா கைத்தொழில் பெரு வீதியை அமைக்கும் திட்டம் விரைவில் முழுமை பெறவுள்ளது.

பஞ்சாப்பின் அமிர்தசரஸ் குஜராத்தின் ஜாம் நகருடன் இணைக்கும் பசுமை வழிச்சாலை 26 ஆயிரம் கோடி ரூபா செலவில் நடைபெற்று வருவதோடு எதிர்வரும் செப்டம்பரில் அப்பாதை அமைப்பு நிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக் கைத்தொழில் பெரு வீதி முழுமை பெறும்போது அது ஜம்மு – காஷ்மீரையும் இணைக்கும் என்றும் இந்த யூனியன் பிரதேசத்தின் விவசாய மற்றும் கைத்தொழில் உற்பத்திகளுக்கு நல்ல விலை கிடைக்கும் என்பதோடு புதிய முதலீட்டாளர்கள் ஜம்மு – காஷ்மீருக்குள் வருவார்கள் என்றும் காஷ்மீர் மொனிட்டர் என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இப்பெருவழிப்பாதை பஞ்சாப், ஹரியானா, உத்தர பிரதேசம், உத்தரகாண்ட், பீஹார், ஜார்கண்ட் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய ஏழு மாநிலங்களை ஊடறுத்துச் செல்லும். மேலும் இப்பாதை 20 முக்கிய நகரங்களூடாக செல்ல விருப்பதால் இப்பகுதிகளில் பெரும் பொருளாதார செழிப்பு ஏற்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் ஜம்மு – காஷ்மீர் பிரதேசங்களில் முதலீடு செய்ய பல வர்த்தகர்கள் முன்வந்திருப்பதோடு மொத்த முதலீடு 66 ஆயிரம் கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அமிர்தரசஸ் கொல்கத்தா கைத்தொழில் பெருவழிச்சாலை என அழைக்கப்படும் இத்திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு, தற்போதைய அமிர்தசரஸ் ஜம்மு பெரு வீதியை சரக்குகளுக்கான வீதியாக ஜம்மு – காஷ்மீர் அரசு உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும் எனவும் காஷ்மீர் மொனிட்டர் சுட்டிக் காட்டியுள்ளது.

## உலக சுகாதார மத்திய நிலையமாக இந்தியா திகழ முடியும்

### நித்தி ஆயோக்கின் முன்னாள் தலைவர் கருத்து

இந்தியா, உலக சுகாதார மத்திய பரிவர்த்தனை நிலையமாக எதிர்காலத்தில் திகழ வேண்டுமானால் அதற்கான ஆயத்தங்களை திட்டமிட்ட ரீதியாக இப்போதிருந்தே ஆரம்பிக்க வேண்டியது அவசியம் என 'நித்தி ஆயோக்'கின் முன்னாள் தலைவரான கோபாலகிருஷ்ணன் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் உலகளாவிய ரீதியாக நிகழ்ந்திருக்கும் புவிசார் அரசியல் மாற்றங்கள் காரணமாக சிறிய மருத்துவ சாதனங்கள் மற்றும் மருந்துகள் உற்பத்தித்துறைகளில் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதால் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வதற்கு இந்தியா தயாராக வேண்டும் என்பதோடு உள்ளூர் மூலப்பொருட்களை தடையின்றி விநியோகிக்கச் செய்வதன் மூலம் எளிதாக இவற்றை உற்பத்தி செய்ய முடியுமென இவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நோய்களை குணமாக்குவதை விட முழுமையான சுகாதார பாதுகாப்பு மற்றும் நோய்த் தடுப்பில் இந்தியா அக்கறை செலுத்த வேண்டுமெனவும் அதற்கு இந்தியாவை பிறப்பிடமாகக் கொண்ட ஆயுர்வேதம் மற்றும் யோகக் கலையை உலகெங்கும் விஞ்ஞான ரீதியாக அறிமுகம் செய்யும் சாத்தியம் காணப்படுவதாகவும் இவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுடன் அர்ப்பணிப்புடன் கூடிய இரு தரப்பு வர்த்தக உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் மருத்துவ தொழில்நுட்ப வளர்ச்சியை உள்நாட்டில் விரிவாக்கும் அதே சமயம் மருத்துவ சுற்றுலாவுக்கான விரிவான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் எனவும் கோபாலகிருஷ்ணன் யோசனை தெரிவித்துள்ளார்.

இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீத்தாராமன் தனது வரவு செலவு திட்டத்தில் இந்தியாவெங்கும் 157 புதிய தாதியர் பயிற்சிக் கல்லூரிகள் நிறுவப்படும் எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கையுடனான 2ஆவது டெஸ்ட்:

# மழை குறுக்கிட்ட முதல் நாளில் நியூசிலாந்து ஸ்திரமான நிலையில்

மழையின் குறுக்கீட்டுக்கு மத்தியில் இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் முதல் நாள் ஆட்டநேர முடிவின் போதுநியூசிலாந்துஅணி2விக்கெட் இழப்புக்கு 155 ஓட்டங்களுடன் ஸ்திரமான நிலையில் உள்ளது.

வெளிங்டனில் நேற்று ஆரம்பமாக இந்த டெஸ்ட் போட்டி இரவில் பெய்த கடும் மழையால் பகல் போசண இடைவேளைக்குப் பின்னரே தொடங்கியது. மழையுடனான காலநிலை மற்றும் கடும் காற்றுக்கு மத்தியில் நாணய சுழற்சியில் வென்ற இலங்கை அணித் தலைவர் திமுத் கருணாரத்ன களத் தடுப்பை தேர்வு செய்தார்.

இலங்கை அணி இந்தப் போட்டியில் ஒரு மாற்றத்துடன் களமிறங்கியது. முதல் டெஸ்டில் துடுப்பாட்டம் மற்றும் விக்கெட்காப்பு இரண்டிலும் சோபிக்கத் தவறிய நிரோஷன் திக்வெல்ல நீக்கப்பட்டு அவருக்கு பதில் நிஷான் மதுஷ்க தனது கன்னி டெஸ்ட் போட்டியில் ஆட அழைக்கப்பட்டார்.




நியூசிலாந்து அணியில் முதல் டெஸ்டில் உபாதைக்கு உள்ளான வேகப்பந்து வீச்சாளர் நீல் வக்னருக்கு பதில் டக் பிரஸ்வெல் அழைக்கப்பட்டார். வேகப்பந்து வீச்சாளரான பிரஸ்வெல் 2016 ஆம் ஆண்டுக்குப் பின்னரே நியூசிலாந்து டெஸ்ட் அணிக்கு திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனினும் மூன்று வேகப்பந்து வீச்சாளர்களுடன் களமிறங்கிய இலங்கை அணி அதிகம் மேலெழுக்கூடிய ஆடுகளத்தில் ஆதிக்கம் செலுத்தத் தவறியது.

டொம் லதம் மற்றும் டெவோன் கொன்வோய் முதல் விக்கெட்டுக்கு 87 ஓட்டங்களை பகிர்ந்து கொண்டனர்.

மிக மந்தமாக ஆடிய லதம் 73 பந்துகளுக்கு முகம்கொடுத்து எந்த பௌண்டரி அல்லது சிக்ஸரும் இன்றி 21 ஓட்டங்களை பெற்ற நிலையில் கசுன் ராஜித்தவின் பந்துக்கு ஆட்டமிழந்தார்.

எனினும் சிறப்பாக ஆடிய கொன்வோய் 108 பந்துகளில் 13 பௌண்டரிகளுடன் 78 ஓட்டங்களை பெற்ற நிலையில் தனஞ்சய டி சில்வாவின் பந்துக்கு அவரிடமே பிடிகொடுத்து வெளியேறினார்.

இந்நிலையில் முதல் டெஸ்ட் போட்டியில் நியூசிலாந்து அணியின் வெற்றிக்கு வழி வகுத்த முன்னாள் அணித் தலைவர் கேன் வில்லியம்சன் மற்றும் ஹென்ரி நிகோல்ஸ் நிதானமாக துடுப்பெடுத்தாடி வந்த நிலையில் போட்டி நிறைவடைவதற்கு 45 நிமிடங்கள் இருக்கும் போது போதிய வெளிச்சம் இன்மையால் முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

இதன்படி முதல் நாள் ஆட்டம் மொத்தமாக 48 ஓவர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டது. இதில் நியூசிலாந்து அணி 2 விக்கெட் இழப்புக்கு 155 ஓட்டங்களை பெற்றுள்ளது.

வில்லியம்சன் 26 ஓட்டங்களுடனும் நிகோல்ஸ் 18 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

நியூசிலாந்து மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையிலான இந்த டெஸ்ட் போட்டி டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் 2500 ஆவது போட்டி என்பது குறிப்பிடத்தக்கது.




# கஸ்ஸாலி இல்லம் வெற்றி

**திறப்பனை தினகரன் நிருபர்**



இக்கிரிகொல்லாவ அந் நூர் தேசிய பாடசாலையின் இவ் ஆண்டுக்கான இல்ல விளையாட்டு போட்டி அண்மையில் பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் அதிபர் எச்.எம். சஹீட் தலைமையில் இடம் பெற்றது.

இதில் கஸ்ஸாலி, ஜாயா, இக்பால் ஆகிய மூன்று இல்லங்களைச் சேர்ந்த மாணவர்கள் போட்டியிட்டன. கஸ்ஸாலி இல்லம் 780 புள்ளிகளை பெற்று 01 ஆம் இடத்தையும், ஜாயா இல்லம் 774 புள்ளிகளை பெற்று 02 ஆம் இடத்தையும், இக்பால் இல்லம் 697 புள்ளிகளை பெற்று 03 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. இதில் 01 ஆம் இடத்தைப் பெற்ற கஸ்ஸாலி இல்லத்துக்கான வெற்றிக் கேடயத்தை அதிபரிடமிருந்து இல்லப் பொறுப்பாசிரியர் பர்சுக்கான் பெற்றுக்கொண்டார்.

# கட்டுக்குருந்தையில் கிரிக்கெட் போட்டி

**பேருவளை விசேடம்**




களுத்துறை கட்டுக்குருந்தை யுனைடட் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கட்டுக்குருந்தை பிரதேசத்தில் வாழும் மற்றும் அப்பிரதேசத்தில் வாழ்ந்து தற்போது வேறு இடங்களில் குடியிருப்பவர்களை ஒன்றிணைக்கும் கிரிக்கெட் போட்டி ஒன்று நாளை (19) களுத்துறை வெட்டுமக்கட பாகிஸ்தான் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பத்து அணிகளாக பிரிந்து நடத்தப்படும் இந்தப் போட்டியில் கட்டுக்குருந்தை பிரதேசத்தில் பிறந்து வளர்ந்த வெளிவிவகார அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் உவைஸ் மொஹமட் ஆகியோரும் பங்கேற்கின்றனர்.

# நேபாளத்தில் திரண்ட கிரிக்கெட் ரசிகர்கள்





நேபாளத்தில் நடைபெற்ற உலகக் கிண்ண லீக் போட்டியை காண ரசிகர்கள் கடல் அலை போல திரண்டனர். நேபாள நகரான கீர்த்திபூரில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற இந்தப் போட்டியில் நேபாள அணி ஐக்கிய அரபு இராச்சியத்தை எதிர்கொண்டது.

இதில் டக்வர்த் லுவிஸ் முறைப்படி 9 ஓட்டங்களால் வெற்றியீட்டி நேபாள அணி சிம்பாப்வேயில் நடைபெறவுள்ள 2023 உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியில் ஆட தகுதியை பெற்றுள்ளது.

இந்நிலையில் ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு எதிரான போட்டியை காண அரங்கில் 30 ஆயிரத்துக்கும் அதிகமான ரசிகர்கள் திரண்டனர். மேலும் போட்டிக்கான டிக்கெட் கிடைக்காமல், மைதானத்திற்கு வெளியே இருந்த ரசிகர்கள் மரங்களில் தொங்கியபடியும் பஸ்ஸின் மீது நின்றபடியும் போட்டியை கண்டு ரசித்தனர்.

நேபாளம் 1996ஆம் ஆண்டு தொடக்கம் சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் இணை அங்கத்துவ நாடாக உள்ளது.

# பீ∴பா தலைமைப் பதவிக்கு இன்பன்டினோ மீண்டும் தெரிவு




சர்வதேச கால்பந்து சம்மேளனத்தின் தலைவராக கியானி இன்பன்டினோ மேலும் நான்கு ஆண்டுகளுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். ருவாண்டா தலைநகர் கிகாலியில் நடந்த பிஃபா மாநாட்டில் 52 வயதான அவர் போட்டியின்றி தெரிவானார்.

2016 ஆம் ஆண்டு இடை நிறுத்தப்பட்ட ஜோசப் பிளாட்டருக்கு பதிலாக பிஃப தலைமை பதவியை ஏற்ற நிலையில் அவருக்கு 2027 தொடக்கம் 2031 வரை மற்றொரு தவணைக்கு போட்டியிட முடியும் என பிஃபா குறிப்பிட்டுள்ளது.

தலைமை பதவிக்காக வேறு ஒருவரும் போட்டியிடாத நிலையில் சம்பிரதாயமாகவே இந்த தேர்வு இடம் பெற்றது. உறுப்பு நாடுகளிடையே அவரது செல்வாக்கு அதிகரித்திருந்த போதும் ஜெர்மனி, நோர்வே மற்றும் சுவீடன் உட்பட பல ஐரோப்பிய நாடுகள் இன்பன்டினோ தொடர்பில் அதிருப்தியில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும் தலைவரை தேர்வு செய்யும் வாக்கெடுப்பில் அதிருப்தி வாக்குகள் கணக்கெடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

“பிஃபா தலைமை பொறுப்பு என்பது கௌரவம் மற்றும் சிறப்பு வாய்ந்தது என்றபோதும் அதிக பொறுப்பு வாய்ந்ததுமாகும். எனது கடப்பாட்டை உங்களால் தொடர்ந்து நம்பலாம்” என்று இன்பன்டினோ 73ஆவது பிஃபா மாநாட்டில் தெரிவித்தார்.

# ஹொங்கொங் கிரிக்கெட்டில் சாமரி அத்தபத்து பங்கேற்பு




பாகிஸ்தானில் அண்மையில் கண்காட்சி கிரிக்கெட் போட்டியில் ஆடிய இலங்கை மகளிர் அணித் தலைவி சாமரி அத்தபத்து ஹொங்கொங்கில் 2023 பெயார் பிரேக் அழைப்பு கிரிக்கெட் தொடரில் ஆடவுள்ளார். இந்தத் தொடர் அடுத்த மாதம் நடைபெறவுள்ளது.

இதன்படி ஹொங்கொங்கில் உள்ள கொவ்லூன் கிரிக்கெட் மைதானத்தில் வரும் ஏப்ரல் 3 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரை இந்தத் தொடர் நடைபெறவுள்ளது.

33 வயதான துடுப்பாட்ட சகலதுறை வீராங்கனையான சாமரி அத்தபத்து கடந்த ஆண்டு ஐக்கிய அரபு இராச்சியத்தில் இந்தத் தொடர் நடைபெற்றபோதும் அதில் பங்கேற்றிருந்தார்.

“இதுவரையில் இந்தத் தொடரில் பங்கேற்கும் ஒரே இலங்கை வீராங்கனையாக இவர் உள்ளார்” என்று இலங்கை கிரிக்கெட் சபை வட்டாரம் தெரிவித்துள்ளது.

எனினும் இந்தத் தொடரில் 36 நாடுகளைச் சேர்ந்த 90 கிரிக்கெட் வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர். ஹொங்கொங் கிரிக்கெட் சபையால் நடத்தப்படும் இந்தத் தொடர் ஐக்கிய அரபு இராச்சியம், நேபாளம், தாய்லாந்து, மலேசியா, பூட்டான், குவைட் மற்றும் ஹொங்கொங் உட்பட ஆசியாவின் திறமைகளை கண்டறிய உதவும் என்று கூறப்பட்டுள்ளது.

# டெல்லி தலைவராக வோர்னர் நியமனம்




இந்தியாவில் இம்மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ள இந்தியன் பிரீமியர் லீக் தொடரில் டெல்லி கெபிடல்ஸ் அணியின் தலைவராக அவுஸ்திரேலியாவின் அதிரடி ஆரம்ப துடுப்பாட்ட வீரர் டேவிட் வோர்னர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும், நட்சத்திர வீரருமான டேவிட் வோர்னர், ஐ.பி.எல் போட்டிகளில் கடந்த பல ஆண்டுகளாக சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணியின் தலைவராக செயல்பட்டு வந்தார். 2016இல் அவர் தலைமையிலான சன்ரைசர்ஸ் ஹைதராபாத் அணி சம்பியன் பட்டம் வென்றது.

இதனிடையே, கடந்த ஆண்டு ஐ.பி.எல் தொடருக்கான வீரர்கள் ஏலத்தில் டேவிட் வோர்னரை சன்ரைஸர்ஸ் ஹைதராபாத் அணி விடுவித்த நிலையில் அவரை டெல்லி கெபிடல்ஸ் அணி இந்திய நாணயப்படி 6.25 கோடிக்கு வாங்கியது.

இதேவேளை கார் விபத்தில் காயமுற்று ரிஷப் பாண்ட் தற்போது ஓய்வில் இருப்பதால், இந்த ஆண்டு ஐ.பி.எல் தொடரில் டெல்லி அணித் தலைமைப் பொறுப்பு வோர்னருக்கு வழங்கப்பட்டுள்ளது.

# ஆப்கானின் கிரிக்கெட் தொடர்பில் ஐ.சி.சி திங்களன்று முக்கிய பேச்சு



ஆப்கானிஸ்தானில் மகளிர் கிரிக்கெட் அணி வெளியேற்றப்பட்ட நிலையில் அதன் சர்வதேச அந்தஸ்து பற்றி சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

ஆப்கானில் தலிபான்கள் ஆட்சியைப் பிடித்ததை அடுத்து அந்நாட்டு மகளிர் கிரிக்கெட் அணி 20 மாதங்களுக்கு முன்னர் பாகிஸ்தானுக்கு தப்பிச் சென்றது. இதில் பெரும்பாலானவர்களுக்கு அவுஸ்திரேலியாவில் அவசர விசா அனுமதி கிடைத்தது.

சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் முழு அங்கத்துவம் பெற்றிருக்கும் ஆப்கானிஸ்தான் மகளிர் கிரிக்கெட்டுக்கு இடமளிக்க வேண்டி உள்ளது.

இந்நிலையில் ஐ.சி.சி குழுக் கூட்டம் வரும் திங்கட்கிழமை டுபாயில் நடைபெறவுள்ளது.

நாட்டில் உள்ள விளையாட்டு நிர்வாகத்தினர் தம்முடன் எந்தத் தொடர்பையும் ஏற்படுத்தவில்லை என்று ஆப்கான் மகளிர் அணி உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ளனர். இது பற்றி அவர்கள் கடந்த டிசம்பரில் ஐ.சி.சிக்கு எழுதியபோதும், அது ஆப்கான் கிரிக்கெட் சபையின் பிரச்சினை என்று அப்போது ஐ.சி.சி கூறியிருந்தது.

“அவர்கள் எம்முடன் ஏன் பேச விரும்பவில்லை என்று எமக்குத் தெரியவில்லை. எமது எதிர்காலம் பற்றி தெரிந்து கொள்ளும் உரிமை எமக்கு உள்ளது” என்று 18 வயதான ஆப்கான் வீராங்கனை பைரூசா தெரிவித்துள்ளார். இந்நிலையில் அவுஸ்திரேலியாவில் இருந்து ஆப்கானை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் ஐ.சி.சி முக்கிய முடிவை எடுக்கும் என்று இந்த பெண்கள் எதிர்பார்த்துள்ளனர்.

ஆப்கான் கிரிக்கெட் வளர்ச்சியில் அவுஸ்திரேலியா முக்கிய பங்காற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விடைபெற்றார் அலீம் தார்



அதிக சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் நடுவராக பணியாற்றி சாதனை படைத்த பாகிஸ்தானின் மூத்த நடுவர் அலீம் தார் ஐ.சி.சி நடுவர் குழாத்தில் இருந்து விலகியுள்ளார்.

58 வயதான அலீம் தார் 144 டெஸ்ட் மற்றும் 222 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் நடுவராக செயற்பட்டிருப்பதோடு இவை இரண்டும் நடுவராக பணியாற்றிய அதிக போட்டிகள் என உலக சாதனையாக அமைந்தது. தவிர அவர் 69 டி20 சர்வதேச போட்டிகளிலும் நடுவராக செயற்பட்டுள்ளார்.

“19 ஆண்டுகள் நடுவர் குழாத்தில் பணியாற்றி 435 ஆடவர் சர்வதேச போட்டிகளில் நடுவராக செயற்பட்ட மூத்த நடுவர் தார் தமது பதவியில் இருந்து விலகியுள்ளார்” என்று சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் வெளியிட்ட ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

ஐ.சி.சி நடுவராக தார் 2002 ஆம் ஆண்டு முதல் சர்வதேச போட்டியில் நடுவர் பணியில் செயற்பட்டதோடு அதற்கு அடுத்த ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெற்ற 2003 உலகக் கிண்ணத்திலும் நடுவராக பணியாற்றினார்.

பாகிஸ்தானில் முதல் தர போட்டிகளில் ஆடிய பின்னரே அவர் நடுவர் பணிக்கு வந்தார். சர்வதேச போட்டிகளில் நடுவராக பணியாற்றியது பெரும் கௌரவமாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில் தென்னாபிரிக்காவின் அட்ரியன் ஹோல்ட்ஸ்டொக் மற்றும் பாகிஸ்தானின் அஹ்சான் ராசா இருவரும் ஐ.சி.சி நடுவர் குழாத்தில் சேர்க்கப்பட்டிருப்பதாக ஐ.சி.சி அறிவித்துள்ளது.